Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்






மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 03 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 18 (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 198



## யுத்தசூழலை உருவாக்க அரசு முயற்சி!

### கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

கிளிநொச்சி ——

விடுதலைப் புலிகளை பேச்சுமேசைக்கு செல்ல விடாமல் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரச படைகள் தீவிரப்படுத்தியுள்ளதால் -

யுத்தநிறுத்த சூழலை இல்லாதொழித்து - மிக மோசமான சூழலை உருவாக்க அரசு முயல்கிறது என்ற சந்தேகம் எழுந்திருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கடற்பயண ஒழுங்கில் படைத்தரப்பு தலையீட்டமை தொடர்பாக கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹென்றிக்சனுக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கடிததத்தில் மேலும் -

எங்கள் தளபதிகளின் கடற்பயணம் தொடர்பாக 13 ஏப்ரல் 2006 இல் உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் விதந்துரைக்கப்பட்ட பயண ஒழுங்குக்கு முற்றிலும் மாறாக - இன்று (15 ஏப்ரல் 2006) (12 ஆம் பக்கம் பார்கக)

# புலிகளின் கடற்பயணம் ரத்து; ஜெனிவா பேச்சு கேள்விக்குறி!

முல்லைத்தீவு ——

வன்னியில் விடுதலைப் புலிகள் மத்திய குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக கிழக்கு மாகாணத் தளபதிகளை கண்காணிப்புக்குழுவினர் ஏற்பாடு செய்த கப்பலில் அழைத்துவரும் பயணத் திட்டம் கடற்படையினரின் குறுக்கீட்டால் கடைசி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

இதனால் ஜெனிவா பேச்சுக்களுக்கு செல்வது தொடர்பான முடிவுகளை எடுக்கும் விடுதலைப் புலிகளின் மத்திய குழுக் கூட்டத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்பின் போது எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் - முல்லைத்தீவு கரையில் இருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)



## எரிபொருள் விலை உயர்வு

கொழும்பு ——

எரிபொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவுடன் எட்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதிகரிக்கப்பட்ட எரிபொருட்களின் விலையின்படி 80ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 88 ரூபாவாகவும், 83 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு லீற்றர் சுப்பர் பெற்றோலின்விலை91 ரூபாவாகவும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிளைமோர் தாக்குதல்

## கடற்பயணம் ரத்தானது: இரு தரப்புமே காரணம்!

# வவுனியா கிளைமோர் தாக்குதல் 5 படையினர் பலி: 8 பேர் காயம்!



வவுனியா —

வவுனியாவில் நேற்று படையினர் பயணம்செய்த பஸ் ஒன்றின்மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர். 8 பேர் படுகாமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

நேற்றுப் பிற்பகல் 12.25 மணியளவில் வவுனியா - மூன்றுமுறிப்பு ஜோசப் முகாமுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த இரண்ட சக்கர உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்ட கிளைமோர் குண்டு வெடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவத்தினர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக (12 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் கிளைமோர் தாக்குதல் போராளி, உதவியாளர் உயிரிழப்பு!

மன்னார் —

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தட்சணா மருதமடுவில் இராணுவத்தின் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் போராளி ஒருவரும் உதவியாளர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இசைவாணன் என்ற போராளியும், அவரது உதவியாளரான நகுலேஸ்வரனும் இராணுவத்தினரின் கிளைமோர் தாக்குதலுக்குள்ளானார்கள்.

பாலம்பிட்டி வீதியில் இடம்பெற்ற இந்தத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கிளைமோர்; 2 விமானப்படையினர் பலி!

திருகோணமலை —

திருகோணமலை தம்பலகாமம் கப்பல்துறைப்பகுதியில் நேற்றிரவு 8.10 மணியளவில் விமானப்படையினர் பயணித்த டிபெண்டர் வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 2 விமானப்படையினர் உயிரிழந்ததோடு ஒருவர் காயமடைந்தார்.

சீனன்குடா விமானப்படை முகாமிலிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்பயணம் ரத்தானது: இரு தரப்புமே காரணம்!

## கண்காணிப்புக்குழுத் தலைவர்

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளின் பயண ஒழுங்கு ரத்துச்செய்யப்பட்டமைக்கு - புலிகளும், அரசுமே காரணம் என கண்காணிப்புக்குழு குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன்:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயண ஒழுங்குகள் குறித்து இறுக்கமான நடைமுறைகளை அரசாங்கம் கடைப்பிடிக்கிறது. இது கண்டனத்துக்குரியது.

இதேபோன்று கூடுதலான கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் விதிக்கின்றனர்.

எனினும் கடந்த காலத்தில் கடைப்பிடித்தமை (12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகரித்து வரும் வன்முறைகளால் சமாதான பேச்சுக்களுக்கு ஆபத்து!

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

ஒஸ்லோ —

இலங்கையில் அண்மைய நாட்களாக அதிகரித்துவரும் வன்முறைகளால் ஜெனிவாப் பேச்சுக்கள் ஆபத்துக்குள்ளாகலாம் என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனீவா பேச்சுக்கள் தொடர்பாக அதற்கு முன் தமது உயர்மட்டத் தலைவர்கள் சந்தித்துப்பேசவேண்டும் என விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்திருந்தனர். அதனடிப்படையில் (12 ஆம் பக்கம் பார்க்க)


APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1.வீடுகளுக்குச் சென்று நோயாளிகளைப் பார்வையிடல் 2. பெண் நோயாளர்கள் பெண் வைத்தியரிடம் ஆலோசனை பெறும் வசதி (தினமும் மாலை)

தொலைபேசி: 021-222 8144

(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

ஆலோசனை நேரம்:
(திங்கள் முதல் சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை



# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆண்டு விழாவும் ஈஸ்டர் விழாவும்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் - மத்தியூஸ் வீதி கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் ஆண்டுவிழாவும், ஈஸ்டர் தின விழாவும் இன்று கழக அரங்கிலும், புனித சாள்ஸ் மகா வித்தியாலத்திலும் நடைபெறவுள்ளது.

காலைமுதல் மென்பந்து கிரிகெட் சுற்றுப்போட்டி, உதைபந்தாட்டப் போட்டிகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் புனித சாள்ஸ் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பரிசளிப்பு விழாவும், கலைநிகழ்வுகளும் கிறீன் கிங்ஸ் சனசமூக நிலைய அரங்கில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (58)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் —

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் கழகத் தலைவர் எஸ்.சங்கர் தலைமையில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு விளையாட்டு செயலாளர்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெறவுள்ளதாக சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக செயலாளர் சி.என்.மதிவதனன் அறிவித்துள்ளார். (58)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம் —

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை காலை 10.30 மணிக்கு விஜியராய சிங்கம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவீள்ளது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (72)

## பாரம்பரிய விளையாட்டு

யாழ்ப்பாணம் —

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் மரபுவழி விளையாட்டுக்களான போர்த்தேங்காய் அடித்தல், கைக்கொடி சவாரி போன்ற விளையாட்டுக்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளதாக கலாசார அலுவலர் மா.அருட்சந்திரன் தெரிவித்தார். (72)

## பாராட்டு விழா

இளவாலை —

இளவாலை வடக்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவரும், விவசாய சம்மேளனத் தலைவரும், தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க உப தலைவரும், சமூக சேவையாளருமாகிய மயிலங்கூடல் செல்லத்துரை பத்திநாதன் அகில இலங்கை சமாதான நீதிவனாக நியமனம் பெற்றமைக்கான பாராட்டு விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் திருமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.


DAIDO Mopet



48CC

Koyo

ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO




60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.

தொலைபேசி : 011-2341580-1, 2438779,

பக்ஸ் 011-2454605

E.mail: zme@slt.lk



நாதன்ஸ் யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த



கள்வனின் காதலி

கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், அசின், பிரகாஸ்ராஜ் மற்றும் பலர் நடித்த

சிவகாசி

கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்

புதுவருட வெளியீடு

பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த




அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

ப.நேரம்:10.30,2.30,6.30,9.30


# ஆண்டொன்றின் அழியா நினைவாக...

மலர்வு 21 07 1927



உதிர்வு 27 04 2005

அமரர்

## சபாரத்தினம் கனகரத்தினம் அவர்கள்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்)

தலைகுனியாத் தலைவனாய் தன்மானம் மிக்கோனாய்
மலையெனவே தோள் நிமிர்த்தும் மாண்பினனாய்
விலைமதியாச் செல்வமென மக்கள் தமைப் படைத்த
கலைவடிவே! கலந்திடுக ஓராண்டில் எம்முள்.

பணிப்பாளர், பணியாளர்கள்.
நமது ஈழநாடு.

(இ)


மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின

அதிரடி வெளியீடு

அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த




ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30


# VACANCY

## DESIGNER (Adobe Photoshop)

### கணினி பக்க வடிவமைப்பாளர்கள் பெண்கள் மாத்திரம்

Adobe Photoshop ல் வேலை செய்யக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் உரிய ஆவணங்களை கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 22.04.2006 ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

விளம்பர இல - 51
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(சி-5260)

# மரண அறிவித்தல்



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## மகேந்திரம் யோகலக்ஷ்மி

அவர்கள் நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் மகேந்திரத்தின் மனைவியும், ராதா, றசீதனின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


உடுவில் கிழக்கு,
K.P. கோவிலடி,
இணுவில்.

(இ)

தகவல்:
P.தில்லைநாதன்.

# நீங்கா நினைவுகளோடு முதலாம் ஆண்டு...

மலர்வு 21 07 1927



உதிர்வு 27 04 2005

அமரர்

## சபாரத்தினம் கனகரத்தினம் அவர்கள்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்)

திதி : திருதியை

| | |
|---|---|
| தந்தையாய் தாயாய் நின்றெம் | எந்தையே! மறக்க லாற்றோம் |
| தரமுறு வாழ்வு காத்தீர் | ஏதினிச் செய்வோ மிங்கே |
| சிந்தையில் நிறைத்தோம் என்றும் | வந்தனை செய்வ தன்றி |
| சீரிய பண்பு தந்த | வகையினிக் காணோ மையா! |

மெய்கண்டான் வீதி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

[C/5252]

கண்ணீருடன்...
மனைவி, சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இனப்படுகொலைகள் தொடர்ந்தால் மக்களைக் காப்பதற்கு நடவடிக்கை

## திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எச்சரிக்கை



திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்தில் இனப்படுகொலை தொடர்ந்தால் எம் மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.எழிலன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடக்கு - கிழக்கில் அரச படைகள் இனப்படுகொலையை நடத்தியமையால்தான் நாம் ஆயுதமேந்தினோம்.

அமைதிக்காலத்திலும் சிங்களக் கடையர்களுடன் இணைந்து அரச படைகள் தமிழ் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

அரச படையினரின் உதவியுடன் தமிழ் மக்களது வீடுகளும், உடைமைகளும் எரித்து தீக்கிரையாக்கப்பட்ட பின்னர், திருமலை நகரிலும் புறநகர் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊரங்கு உத்தரவு நேரத்தில் அரச படைகளின் உதவியுடன், சிங்களக் காடையர்கள் - தமிழ் மக்களின் வீடுகளுக்குள் உள்நுழைந்து, தாக்குதல் நடத்துவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இனியும் நாம் பொறுத்திருக்க முடியாது. திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குண்டர்களுடன் இணைந்து, இராணுவத்தினர் இனப்படுகொலையைத் தொடர்ந்து நடத்தினால் எம் அப்பாவி மக்களையும், மக்களது உடைமைகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ள நேரிடும். அப்படி யான நிலை ஏற்பட்டால், தற்போதைய அமைதி முயற்சிகள் சீர்குலைந்து போகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 11 உள்ளூராட்சி சபைகளுக்கு மே 20 ஆம் திகதி தேர்தல்

கொழும்பு —

வடக்கு - கிழக்கில் 11 உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது.

நாடெங்கும் மொத்தமாக 22 உள்ளூராட்சி சபைகளுக்கு அதே நாளில் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தல் முன்னர் ஏப்ரல் 18ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. வெசாக் பண்டிகை மற்றும் பரீட்சைகளையொட்டி மே 20 ஆம் திகதி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

வவுனியா நகரசபை, வவுனியா (சிங்கள பிரிவு) பிரதேச சபை, காத்தான்குடி நகரசபை, கோரளைப்பற்று மேற்கு பிரதேசசபை, ஏறாவூர் பிரதேச சபை, நாவிதன்வெளி பிரதேச சபை, பொத்துவில் பிரதேச சபை, கல்முனை பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச சபை, அக்கரைப்பற்று பிரதேசசபை, நிந்தவூர்பிரதேச சபை ஆகியவற்றுக்கு மே மாதம் 20 ஆம் திகதி தேர்தல் நடைபெறும்.

# புலிகளின் தாக்குதல்கள் குறித்து ஜெனிவா பேச்சில் கூடிய கவனம்

## என்கிறார் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு —

படையினர் மீதான புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் தொடர்பாக ஜெனிவா பேச்சுவார்த்தையில் விரிவாக ஆராயப்படுமென அரசாங்க பேச்சுவார்த்தைக் குழு தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் - இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தவுள்ளனர். ஜெனிவாவில் இடம்பெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை புலிகள் கடுமையாக மீறி வருகின்றனர். அத்துடன், நடைமுறையிலுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை விதிமுறைகளையும் மீறி வருகின்றனர்.

இது தொடர்பாக விடயங்களை அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும். அத்துடன், நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்படும்.

சமாதான பேச்சுவார்த்தையை சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜெனிவா உடன்படிக்கையை புலிகள் மீறிய போதும், அரசாங்கம் பொறுமையுடனும் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# ஆணைக்குழு நியமனங்களுக்கு ஐ.தே.கட்சி கடும் எதிர்ப்பு!

கொழும்பு —

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மற்றும் அரசசேவை ஆணைக்குழுக்களுக்கு அதிகாரிகளை நியமித்தது 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மீறும் செயலென்பதால் அதற்கு எதிராக நாடாளுமன்றிலும், வெளியேயும், எதிர்ப்பை வெளிப்படுத்த ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம், அரசியலமைப்பு சபையை நியமித்தது, அதன் மூலம், மற்றைய சுயாதீன குழுக்களுக்கான அதிகாரங்களை நியமிப்பதற்கே என ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புசபைக்குவெளியே ஜனாதிபதி இவ்வாறு பிரதிநிதிகளை நியமிப்பது பிழையான முன்மாதிரி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை சட்ட ரீதியானது அல்ல என்பதால், நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பை வெளிப்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# திருமலை வன்முறைகளுக்கு நடவடிக்கை எடுக்க முடியாது

## கண்காணிப்பு குழு கைவிரிப்பு

திருகோணமலை —

திருமலையில் சிங்களக் காடையர்களால் நடத்தப்படும் வன்முறைகளுக்கு எந்தவொரு மாற்று நடவடிக்கையும் எடுக்க முடியாது என போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவிக்கையில் -

ஒரு இனரீதியான அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரியப்படுத்தியுள்ளோம்.

எந்தவித மாற்று நடவடிக்கையையும் எடுக்க முடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலைமை மிகவும் மோசமான முறையில் போய்கெண்டு இருப்பதன் காரணமாக, இது ஒரு பாரிய நெருக்கடி நிலைமையை தோற்றுவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது குறிவைத்து இப்படியான தாக்குதல்கள் நடத்தப்படுவதன் காரணமாகப் படையினருடைய ஒத்தாசையுடன் இந்தத் தாக்குதல்கள் நடைபெறுவதன் காரணமாக இதற்கு எதிரான நெருக்கடி நிலைமை தோற்றுவிக்க கூடிய வாய்ப்பு அங்கு தென்படுகிறது.

ஆகவே உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென நாங்கள் வலியுறுத்தியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# நோர்வே தமிழர் சுகாதார அமைப்பின் தமிழ் மக்களுக்கான சிறப்பு மருத்துவசேவை

ஒஸ்லோ —

நோர்வே தமிழர் சுகாதார அமைப்பினர் நோர்வே வாழ் தமிழ் மக்களுக்கான சிறப்பு மருத்துவ சேவையினை வழங்கினர்.

நேற்று முன்தினம் தொடக்கம் இன்று வரையான மூன்று நாட்கள் ஒஸ்லோவில் இந்த மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

மருத்துவ நிபுணர்கள், பல்மருத்துவர்கள், தாதிமார்கள், மருத்துவக் கல்வி மாணவர்கள்மற்றும்மருத்துவத் துறை பணியாளர்கள் பலரும் இந்தச் சேவைக்கான தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

இந்த மருத்துவ சேவையில் உடல் நலப் பரிசோதனை, பல்மருத்துவம் மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

தவிர உடல் நலம், மருத்துவம், உளவியல் சார்ந்த பல்வேறு கருத்தரங்குகளும் இடம்பெற்று வருகின்றன. இந்த நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், உளவியல் நிபுணர்கள் ஆகியோர் கருத்துரைகளை வழங்கி வருகின்றனர்.

மகப்பேற்றின் போது பெண்களுக்கு உண்டாகும் நோய்கள், பிள்ளை வளர்ப்பும், உளவியல் ரீதியான கவனிப்புக்களும், குருதி அழுத்தம், பொதுவான நோய்கள் போன்ற பல்வேறு கருப்பொருட்களின் கீழ் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சிறப்பு மருத்துவ சேவை, ஆரம்பிக்கப்பட்ட முதல் நாள் 100 பேர்வரையில் மருத்துவ சேவையைப்பெற்று பயனடைந்தனர் என நோர்வே தமிழர் சுகாதார அமைப்பின் பொறுப்பாளர் ராஜா தெரிவித்தார்.

அத்தோடு நோர்வேயின் பல்வேறு நகரங்களைச் சேர்ந்த மருத்துவர்கள் வருகை தந்திருந்ததோடு, சுவீடனைச் சேர்ந்த தந்து தமிழ் மருத்துவர் அருள் சந்தானம் ஆகியோரும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொள்கலன் திருட்டுப் பொருட்களை கண்டுபிடிக்க ஸ்கான் இயந்திரம்

கொழும்பு —

கொள்கலன்களில் மறைத்து கொண்டு வரப்படுகின்ற பொருட்களைக் கண்டு பிடிப்பதற்கு 150 கோடி ரூபா செலவில் சுங்கத் திணைக்களத்துக்கு ஸ்கான் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பிரான்ஸிலிருந்து இந்த இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொள்கலன்களில் மறைத்து வைத்து கொண்டு வரப்படும் பொருட்களின் தொகை அதிகரித்துள்ளதால், அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு இந்த ஸ்கான் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும், அவை 250 மில்லி மீற்றர் தொலைவு வரை ஊடுருவி பார்க்கும் சக்தி மிக்கவை எனவும் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரதி ஜயதிலக தெரிவித்தார். (தே)

# சமாதான முயற்சி தொடர்பாக கருத்து கணிப்பு நடத்தத் திட்டம்

கொழும்பு —

அரசின் சமாதான முயற்சி தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள சில கட்சிகள் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ள தால் எழுந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு மக்கள் கருத்துக்கணிப்பொன்றை நடத்துவதன் மூலம் சமாதான முயற்சிக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென அரசாங்கத்துக்கு ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் ஆலோசனை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. இதுகுறித்து ஜனாதிபதி முடிவெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவித்தன.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப்போல, ஐ.தே. கட்சிக்கும் வாக்களித்த பெரும்பாலான மக்கள் - இந்தக் கருத்துக்கணிப்பின் போது தமது ஆதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை அரசுக்குள்ளதால் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடத்தி, சமாதான முயற்சி மீதான எதிர்ப்பை இல்லாமல் செய்வதற்கு நல்லதொரு சந்தர்ப்பமென அரசின் ஆலோசகர்களின் கருத்தாகவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் - ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் சமாதான முயற்சிக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

எனவே, சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசுக்குப் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளதனால் - மக்களது கருத்துக் கணிப்பு மூலம், அதற்கு தீர்வைக் காண்பதே சிறந்த ஜனநாயக முறையென அரசியல் ஆலோசகர்களின் தீர்மானமாகும்.

தற்போதுள்ள அரசியல் யாப்புக் கமைய, தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு விடயம் தொடர்பாகவும் மக்கள் கருத்துக் கணிப்பை நடத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

# முதல் மூன்று மாதங்களில் பெருமளவு ஊழல் முறைப்பாடு

கொழும்பு —

இந்த வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதிக்குள் மட்டும் முறையற்ற விதத்தில் சொத்துக்கள் சேர்த்தமை, மற்றும் ஊழல் செயற்பாடுகள் தொடர்பான 1300 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக லஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளுக்கெதிராக இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் இதுவரை அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக லஞ்ச ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (தே)

# ரேக்கி கிண்ண முதல் சுற்றில் ஜொலிஸ்ரார் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம்—

இலங்கை கிரிக்கெட்டின் 3 ஆம் பிரிவுக்கான போட்டிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து கலந்துகொள்ளும் அணியைத் தெரிவுசெய்வதற்காக - யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் பதிவு செய்யப்பட்ட 13 கழகங்களிடையேயும், ரெக்கி கிண்ணத்துக்காக 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட லீக் முறையிலான முதலாம்சுற்று ஆட்டம் ஒன்றில் -

யாழ்.ஜொலிஸ்ரார் விளை யாட்டுக் கழகம் 3 விக்கெட் வித்தியாசத்தில் - ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது.

இந்தப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ட் அணியினர் 45 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் நிரோசன் 47 ஓட்டங்களையும், பிரதீபன் 28 ஓட்டங்களையும், ஜனாதனன் 19 ஓட்டங்களையும், ஜெயசுதன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் சார்பாக ஜனாதரன் 4 விக்கெட்டுக்களையும், லக்சுமிகாந் 3 விக்கெட்டுக்களையும், [illegible]ளசிகன் 2 விக்கெட்டுக்களைய[illegible]ஸ்வான் 1 விக்கெட்டையும் [illegible]ந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெ[illegible]டிய ஜொலிஸ்ரார் விளையா[illegible]க்கழகத்தினர் 7 விக்கெட் இழப்புக்கு 34 ஓவர்களில் 204 ஓட்டங்களைப் பெற்று இந்தப் போட்டியில் வெற்றி பெற்றனர்.

இந்தப் போட்டியின் வெற்றிக்கு ஜொலிஸ்ரார் வீரர் சலீஸ்வரன் பெற்றுக்கொடுத்த 93 ஓட்டங்களே அடிப்படையாக அமைந்தது. மேலும், அருண்குமார் 28 ஓட்டங்களையும், ஜனகன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியின் சார்பாக ஜெயசுதன் 4 விக்கெட்டையும், பிரதீபன் 2 விக்கெட்டையும், செந்தூரன் 1 விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர். (58)

# ஈஸ்டர் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் - ஈச்சமோட்டை சனசமூக நிலையமும், ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் வருடாந்த ஈஸ்டர் தின மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இன்று ஈஸ்டர் தினத்தில் ஈச்சமோட்டை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு உள்ளூர் அணிகளுக்கிடையிலான நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், தொடர்ந்து வருடாந்த ஈஸ்டர் தின இளைஞர்கள் எதிர் சம்சாரிகள் கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளது.

1942 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் ஈஸ்டர் தினத்தில் இத்தகைய கிரிக்கெட் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (58)

# விளையாட்டு

## 13 வயதுப் பிரிவு கிரிக்கெட் நாளை இறுதிப்போட்டி!

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் கடந்த வருட இறுதியில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளிடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் கடந்த மாதம் நடைபெற்று, அதன் இறுதிப் போட்டி நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி மோதவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டி கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்டு கால நிலை காரணமாகவும், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையாலும் ஒத்திவைக்கப்பட்டு இந்த வருடம் நடத்தி முடிக்கப்படவிருக்கிறது. (58)

## இன்றைய போட்டி!

யாழ்ப்பாணம்—

இலங்கை கிரிக்கெட்டின் 3 ஆம் பிரிவுக்கான சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளும் யாழ். மாவட்ட அணியை தெரிவுசெய்வதற்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 13 விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான 50 ஓவர்கள் கொண்ட லீக் முறையிலான ரேக்கி கிண்ண இறுதி லீக் போட்டிகள் இன்று 9.30 மணிக்கு நடைபெற வுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் காலிறுதிப்போட்டிகள் அடுத்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இன்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் - கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதும் போட்டி நடைபெறவுள்ளது. (58)


உ

**ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்**
**பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்**

**இடம் : கல்லூரிப் பிரதான மண்டபம்**
**காலம் : 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை**

**பிரதான நிகழ்வுகள்**

காலை 9.30 : விளையாட்டு நிகழ்வுகள்
மதியம் 12.00 : மதிய விருந்து
பி.ப 1.30 : பொதுக்கூட்டம்

கல்லூரியில் இடம்பெற்று வருகின்ற பவளவிழாக் கொண்டாட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பழைய மாணவர்களின் பங்களிப்புத் தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டு முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவேண்டியிருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

வ. ஆறுமுகம்
தலைவர்

[C/5200]

க.இராசதுரை
செயலாளர்.



# CARITAS - HUDEC
## கரித்தாஸ் – கியூடெக்

**வடக்கில் பணியாற்றும் தமது மனிதாபிமானப் பணியாளர்களின் பாதுகாப்பை வேண்டி கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் தனது அலுவலகப் பணிகளைத் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது.**

சித்திரை மாதம் 10 ஆம் திகதி நடந்த கிளைமோர் தாக்குதலில் தமது இரு நிர்வாகப்பணியாளர்கள் கொல்லப்பட்ட சோக சம்பவத்தை அடுத்து கரித்தாஸ் – கியூடெக் நிறுவனம் தனது அலுவலகப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் அடிப்படைக் கோட்பாடுகளின் பிரகாரமும், பாதுகாப்பு அளவீடுகளின்படியும், தமது எதிர்ப்பினை வெளிக்காட்டும் முகமாகவும், பலியானவர்களின் குடும்பங்களுடன் தமது சோகத்தைப் பகிர்ந்து கொள்ளும் முகமாகவும் சித்திரை 19 ஆம் திகதி பிற்பகல் வரையும் சோக தினங்களாக பிரகடனம் செய்கிறது.

கரித்தாஸ் – கியூடெக் பணிப்பாளர் அருட்பணி கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளார், "எமது சிரேஷ்ட நிர்வாகப் பணியாளர்கள் கொல்லப்பட்ட நிகழ்வை வன்மையாகக் கண்டிக்கின்றோம். மேலும் எமது பணியாளர்களை இப்படியான ஆபத்தான சூழ்நிலைகளில் கள வேலைகளில் ஈடுபட வைப்பது பற்றியும் நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது" என்று கூறுகிறார்.

திரு.சண்முகநாதன் கந்தபத்மநாதன் (வயது 55) சிறுவர் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், திரு.செல்வேந்திரா பிரதீப்குமார் (வயது 29) சமூக அபிவிருத்திக் குழுத்தலைவர் என்ற இருவரும் வடமராட்சி கிழக்கில் நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்திக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு விட்டு நிறுவனத்தின் அடையாளக் கொடியுடனான வாகனத்தில் திரும்பும் வேளை A - 9 பாதையிலுள்ள, மிருசுவில் என்ற இடத்தில் கிளைமோர் தாக்குதலில் சிக்குண்டு மரணமடைந்தனர். இதில் வாகனச் சாரதி தலையில் ஏற்பட்ட பலத்த காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, புதன் கிழமை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். இன்னுமொரு பணியாளர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார். கரித்தாஸ் – கியூடெக் வாகனம் இராணுவ வாகனமொன்றை நேர் எதிராகக் கடக்க முயன்றவேளை பாதையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈருருளியில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததனால் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் சுனாமி மீள் நிர்மாணப் பணிகளில் நிறுவனத்தின் சார்பில் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் ஆவார்.

கரித்தாஸ் – கியூடெக் நிறு[illegible]த்திற்கு அவர்களது வாகனம் நேரடி இலக்கு அல்ல எனத் தெரிவிக்கப்பட்டாலும், நிறுவனமானது சாதாரண குடிமக்களின் இழப்பை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், இது சம்பந்தமான சகல தரப்பினரையும் மனிதாபிமானப் பணியாளர்களையும், சாதாரண குடிமக்களையும் பாதுகாப்பதற்கான கடமைப்பாட்டிற்கு மதிப்பளிக்குமாறு வேண்டி நிற்கின்றது.

மக்களுக்கு தமது கடமைகளைச் செய்வதற்கு கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்தின் நடமாட்டமானது பாதுகாப்புக் காரணங்களினால் மட்டுப்படுத்தப்பட்டால், அக் கடமைகளைச் செய்வதில் தடங்கல் ஏற்படும் என்பதை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றது.

**இயக்குநர்,**
**மனித முன்னேற்ற நடுநிலையம்,**
**கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்.**
**சிறீலங்கா.**

[C/5254]



# CARITAS - HUDEC
## கரித்தாஸ் – கியூடெக்

**Caritas- Hudec temporarily close offices and calls for safety for all humanitarian personnel operating in the North-East**

Following the killing of two of its staff members in a Claymore mine explosion on April 10th, Caritas-Hudec announces the temporary closure of its offices.

As a sign of protest against the breach of one of the basic principles of international humanitarian law and as a security measure, the organization has decided to extend its mourning period in solidarity with the families of the victims until Wednesday the 19th evening.

"We severely condemn the incident that killed two of our senior staff and have decided to reduce our activities. Given the escalating violence in the last few days, we need to review our field operations to avoid putting more of our staff at risk" says Rev. Fr C.G. Jeyakumar, Director of Critas-Hudec.

Mr Shanmuganathan Kanthapathmanathan (55), Programme Manager of the children's programme, and Chelvendra Pradeepkumar (29), Community Development Team Leader, both died in the Claymore mine explosion on the A9 Road in Mirusuvil, on their way back fron Vadamarachchi East where they had attended a meeting with the PDS. The driver of the car was severely injured in the head, immediately hospitalized in Jaffna and transferred to Colombo on Wednesday. The third passenger was only slightly injured and has been released from the hospital. The Caritas -Hudec vehicle was crossing an army pickup when the mine, attached to a bicycle on the side of the road, was detonated. All victims were involved in the organization's post-tsunami rehabilitation efforts.

While Caritas-Hudec was informed that its vehicle was not the direct target of the attack it cannot accept any civilian loss and calls for all parties to respect their commitment to safeguarding the lives of humanitarian personnel and civilians in general.

Caritas-Hudec stresses that when its mobility is hampered for security reasons it is very difficult if not merely impossible to deliver its commitments towards the people or for that matter to the government.

**Director,**
**humanitarian Development Center,**
**Caritas-Hudec, Jaffna,**
**Sri Lanka.**

[C/5254]

# பாரம்பரிய கலை ஆவணப்படுத்தல் ஒலிப்பேழை, இறுவட்டு வெளியீடு

நெடுந்தீவு—

பாரம்பரிய கலை ஆவணப்படுத்தல் தொடர்பான ஒலிப்பேழை இறுவட்டு அறிமுக விழா யாழ். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தால் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் -

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் க.கந்தசாமி, பேராசிரியர் செ.சிவலிங்கராஜா, வணிகப் பீடாதிபதி க.தேவராசா, யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், கலாநிதி க.குணராசா, மாநகர சபை ஆணையாளர் க.சிவஞானம், யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரங்க நிகழ்வுகளாக ஆசியுரைகள், வாழ்த்துரைகள், விருந்தினர் உரைகள் ஆகியன இடம்பெறுவதுடன், ஒலிபேழை, இறுவட்டு வெளியீட்டு வைத்தல், சிறப்புப் பிரதிகள் வழங்கல், துணை அனுசரணையாளர்கள் கௌரவித்தல், இசை நாடக, சிந்து நடனக்கூத்து கலைஞர்கள் மற்றும்அணிசெய் கலைஞர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

காத்தவராயன், சிந்து நடனக் கூத்து, இசை நாடகங்களான - ஞான சௌந்தரி, சம்பூர்ண அரிச்சந்திரா, பவளக்கொடி, நல்லதங்காள், கோவலன் கண்ணகி, சத்தியவான் சாவித்திரி, சாரங்கதரன், ஸ்ரீவள்ளி, நத்தனார், பூதத்தம்பி ஆகியவற்றின் ஒலிப் பேழைகளும், இறுவட்டுக்களும் வெளியிடப்படவுள்ளதுடன்-

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், பதிலுரையை பாரம்பரிய கலைகள் மேம் பாட்டுக்கழகச் செயலாளர் கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களும் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)



யாழ். சென். மேரிஸ் வித்தியாலய (ஓ.எல்.ஆர்.) இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு வருகைதந்த பிரதம விருந்தினர் அருட்திரு எஸ்.ஏ. றொசான் அடிகள் மற்றும் பிரமுகர்களை அதிபர் ம.செபஸ்தியாம் பிள்ளை மாணவ, மாணவிகளின் பான்ட் வாத்தியத்துடன் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம். (206)

# முகாமைத்துவம் குறித்த பயிற்சியை மாணவர்களுக்கு வழங்கவேண்டும்

## மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

திருகோணமலை—

மாணவர்களுக்கு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வழங்கப்படவேண்டும் என வடக்கு -கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

மாணவர்களுக்கு கல்வியோடு முகாமைத்துவம் சம்மந்தமான அறிவும் அவசியமானதாகும். மாணவர்களுக்கு கல்வி கற்கும் காலப்பகுதியில் முகாமைத்துவம் சம்மந்தமான பயிற்சியும் அளிக்கப்பட்டால் அவர்களது எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

பாடசாலைகளில் போதியவளங்கள் இல்லை என்றும், ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதெனவும் காரணம் கூறாது மாணவர்களது கல்விக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களை உருவாக்குவது இன்றைய ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அன்று எமது ஆசிரியர்கள் எமக்கு அளித்த கல்வியும், பயிற்சியும் தான் இன்று எம்மை உயர்வடையச் செய்தது என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

# மனித வாழ்வு மேம்பட்டு விளங்க ஒழுக்கமுடைமையே காரணமாகும்

## ஓய்வுபெற்ற உபஅதிபர் அப்பாத்துரை

மானிப்பாய்—

மனித வாழ்க்கை மற்ற உயிர்களின் வாழ்க்கையை விட மேம்பட்டு விளங்குவதற்குக் காரணம் மனிதர்களிடத்தே காணப்படும் ஒழுக்கமுடைமை தான். இந்த ஒழுக்கக் கல்வியை சிறுவரிடத்தே சிறப்பாக நடைமுறைப் படுத்த ஆன்மீகக் கல்விப் போட்டிகள் வழிகாட்டி நிற்கின்றன.

இவ்வாறு தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஓய்வுபெற்ற உப அதிபர் க.அப்பாத்துரை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாணவரிடையே நடத்தப்பட்ட சமய, கலாசாரப் போட்டிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் -

மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை அவனது வாழ்வு அறநெறி கலந்ததாக இருத்தல் வேண்டும். வாழ்க்கை தவறிவிட்டால் அறநெறி இல்லாமல் போய்விடுகிறது. எனவே மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அறநெறி அத்தியாவசியமானதாகும்.

அதன் காரணமாகவே இன்று நமது வருங்கால சந்ததிகளின் நலன் கருதி இளம்பராயத்தில் அறநெறி வகுப்புக்களைப் பயன்படுத்தி தம்மை நல்லவர்களாக்கிக் கொள்ள இந்து சமய அபிவிருத்தி அமைச்சும், மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று நாகரிகம் படைத்தவனாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதன் தெய்வ வணக்கத்தைக் கடைப்பிடித்துக் கொள்ள வேண்டும். சிறிய வயதில் வளர்ந்து வரும் குழந்தையைப் பேணிப் பாதுகாத்துவரும் தாயானவள் குழந்தைக்கு நல்ல பழக்க வழக்கங்களையே சொல்லிக் கொடுத்து வருகின்றாள். இதுவும் அறநெறிதான் என்று கூறினார். இவரைத் தொடர்ந்து பேசிய பாடசாலை அதிபர் சமூக ஜோதி கா.கணேசதாசன் -

இன்றைய நிலையில் இந்து ஆலயங்கள் - பூசைகள், கிரியைகளில் மட்டும் கவனம் செலுத்தாது, 'சமுதாய வழிகாட்டல் நடவடிக்கைகளிலும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

சமூக சேவை இன்று முக்கியமாகத் தேவைப்படுகிறது. இதனை நன்குணர்ந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினர் அறநெறிப் பாடசாலையை ஆரம்பித்துள்ளனர். இதற்கு இந்து சமயத்தவர்களின் பூரண ஒத்துழைப்பும் அவசியம் தேவையானதாகும். பிஞ்சு உள்ளங்களில் நஞ்சை விதைக்கக் கூடாது எனக் குறிப்பிட்டார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை நான்கு



பெயர் : அ.சண்ஜீவ்
முகவரி : நாவாந்துறை.

அகவை ஒன்பது



பெயர் : ந.ஹரிகரன்
முகவரி : நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : --------------------
முகவரி : --------------------
பிறந்த ஆண்டு : --------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்

# நீர் உயிரிவள தொழில்நுட்ப ஆசிரியர்களை உடன் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

திருநெல்வேலி—

நீர், உயிரிவள, தொழில்நுட்ப ஆசிய கற்கைநெறியைக் கற்பிக்கும் ஆசிரியர்களை தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் த. காங்கேசபிள்ளை கேட்டுள்ளார். இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்த முறை வெளியிடப்பட்ட வர்த்தமானியில் நீர், உயிரிவள, தொழில்நுட்ப ஆசிரிய கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்படவில்லை. ஆனால் இந்தப் பாடத் துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலர்இதுவரை பயிற்சி பெறாதுள்ளனர். அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு என்ன செய்வதெனக் கேட்டனர்.

இதனையடுத்து கல்வியமை ஆசிரியர் கிளையுடன் தொடர்பு கொண்டதற்கமைய இது சார்ந்த கற்கைநெறிக்கு விண்ணப்பங்களைச் சேகரித்து அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தத் துறை சார்ந்த பயிற்றப்படாத ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

# 54 ஆவது ஆண்டு நிறைவு விழா

கோண்டாவில்—

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமும், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகமும், பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் 54ஆவது ஆண்டு நிறைவு விழாவும், இல்ல மெய்வல்லுநர் போட்டியும், பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் ஸ்ரீநாராயணா சனசமூக நிலையத் தலைவர் கோ.நரேந்திரன் தலைமையில் நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கின. எதிர்வரும் புதன்கிழமை வரையும் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் தினமும் 3 மணி முதல் விளையாட்டு நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும், நாடகங்களும் இடம்பெறவுள்ளதாகக் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (58)

# விவசாய கண்காட்சியும் நடமாடும் சேவையும்

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் - விவசாயக் கண்காட்சியையும், நடமாடும் சேவையையும் நாளை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக அரசாங்க அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக மாகாண காணி விவசாய கால்நடை அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சு செயலாளர் ஜனாப் ஏ.ஆர். எம்.மஹ்ரூப், மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தமிழ் செய்தித் தகவல் மையம் நடத்திய சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம்—

மெற்றோ பொலிற்றன் - நவகலா நிறுவனங்களின் அனுசரணையுடன் தமிழ் செய்தித் தகவல் மையம் கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது-

இவர்களுக்கான பரிசளிப்பு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத் தில் நடைபெறவுள்ளது.

### 12 வயதின் கீழ்

அலோசியஸ் ஒஸ்ரின் (யாழ். இந்துக் கல்லூரி), நகுலேந்திரன் லவலோஜன் (யாழ். இந்துக் கல்லூரி), அலோசியஸ் அன்ரூ (யாழ். இந்துக் கல்லூரி), சாம் அபிசாக் இராமகிருஷ்ணன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), கஸ்தூரி ஜெயக்குமார் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பரமநாதன் மகிதனன் (யாழ். இந்துக் கல்லூரி), பிருகதீஸ்வரன் குணவரன் (யாழ். இந்துக் கல்லூரி), பற்குணம் நேர்த்திகா (யாழ். வேம்படி உயர்தரப் பாடசாலை), சந்திரராஜா ஜனுசேந்திரா (வைத்தீஸ்வராக் கல்லூரி), சிறிரவிகுலன் கிரிபரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

### 10 வயதின்கீழ்

அலோசியஸ் ஜஸ்ரைன் (ஜோண். பொஸ்கோ), சோதிநாதன் சஞ்சயன் (கும்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), மோகன் ஆகாசன் (யாழ். மத்திய கல்லூரி), மகாதேவன் ஜீவகாசன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), மணிசேகரன் தரண்யா (மகாஜனா கல்லூரி), சுந்தரேஸ்வரர் வித்தியாசாகர் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), குகநாதன் குணசிகா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), பேடினன் றூமன் கிங்ஸிலி (பொஸ்கோ), சதானந்தன் சபேசன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), கணேசகுமார் கயானியா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

### 15 வயதின் கீழ்

சிவநாதன் அபியன் (யாழ். இந்துக் கல்லூரி), சிறிபவன் றஜீபவன் (ஹாட்லிக் கல்லூரி), ஜெயராஜா ஜெயனறியோ (மகாஜனாக் கல்லூரி), கௌசல்யா நகுலநாதன் (வேம்படி மகளிர்), சிவகணேஸ் அரவிந்த் (ஹாட்லிக் கல்லூரி), இளங்குமரன் கவிஸிகன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜெகதீஸ்வரன் ஜனகன் (ஹாட்லிக் கல்லூரி), சிறிகரன் யசோகரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பாலஸ்கந்தன் பானுஜன் (யாழ். இந்துக் கல்லூரி), சோதிநாதன் விஷ்ணுசந்தர் (ஹாட்லிக் கல்லூரி), சிவகுமார் மேகலநாதன் (யாழ். இந்துக் கல்லூரி).

### 19 வயதின் கீழ்

சிறிகணேஸ் கோபிகணேஸ (யாழ். இந்துக் கல்லூரி), சிவகுருநாதன் வல்லவக்குமாரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சுவர்ணா பத்மநாதன் (வேம்படி மகளிர்), செ.அன்று சேவியர் (சென். பற்றிக்ஸ்), பிறைசூடி சுமித்திரன் (மீசாலை விக்னேஸ்வரா), சிவபாலன் ஹரிகிருஷ்ணா (மீசாலை விக்னேஸ்வரா), நிர்மலேந்திரன் பர்மிலன் (யாழ். இந்துக் கல்லூரி), கனகசபை எழில்வேன் (யாழ். இந்துக் கல்லூரி), பிறைசூடி திருவாசகன் (மீசாலை விக்னேஸ்வரா), தர்சனா ரவீந்திரன் (வேம்படி மகளிர்).

விமலனின்

# பக்கம் பார்த்து பேசு



ஷேன் வோன் - காற்றில் கரையும் வார்த்தைகள்.

சர்வதேச கிரிக்கெட்டில் முடிசூடா மன்னர்களாக விளங்கும் அவுஸ்ரேலியர்கள் - வார்த்தையாடல்களில் ஈடுபடுவதிலும் வல்லமை பெற்றவர்கள் என்பது துலாம் பரமான விடயம். இது போன்ற செயற்பாடுகளாலேயே 'இறுகப்பிடித்த குறுமணல் குறைந்து வருவது மாதிரி' அவுஸ்ரேலிய அணியின் நல்லபிப்பிராயமும் அவ்வப்போது சர்ச்சைக்குள்ளாவதும் சகஜமானதே.


பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள அவுஸ் ரேலிய அணி முதல் டெஸ்ட் போட்டியை கடும் பிரயத் தனத்தின் மத்தியில் வென்று தன் பெயரைக் காத் துக்கொண்டது.

அவுஸ்ரேலிய அணி பங்களாதேஷில் கால் பதித்ததுமே சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோன் - முரளீதரனை மனதிருத்தி பங்களாதேஸ் அணி குறித்து வெளியிட்ட தரக்குறைவான கருத்தொன்றை மறுதலித்திருந்தார்.

சிலர் குட்டி அணிகளுக்கெதிராக அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றி எனது சாத னைகளை விரைவிலேயே முறியடித்து விடுகிறார்கள் என்பதையே அவர் மறுத்திருந்தார்.

ஓட்டங்கள் குவிப்பது எவ்வாறு துடுப்பாட்ட வீரர்களின் கடமையோ அவ்வாறே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்துவதும் பந்துவீச்சாளர்களின் கடமை. இதில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகளுக்கிடையே பேதம் எதுவும் பார்க்க முடியாது என்றும் தத்துவார்த்த ரீதியில் கருத் துக்களை அள்ளிவீசினார்.

வோன் முதல் இனிங்ஸில் 20 ஓவர்களில் 112 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றாத நிலை வரும் என்பதை ஞான திருஷ்டியால் முன்பே உணர்ந்தோ தெரியவில்லை, இப்படியொரு மாற்று சிந்தனை அவருக்கு திடீரென தலையெடுத்திருந்தது.



சஹ்ரியார் நபீஸ் - விருட்சமாகும் வித்து.

ஆனாலும் ஷேன் வோன் விடயத் தில் இதுகுறித்து ஆச்சரியப்படத் தேவையேயில்லை. சொந்தமண் ணில் வைத்து குறிப்பிட்ட அணிகள், வீரர்களைப் பற்றி குறை குற்றம் கூறுவதும் பின்னர் அவ்வீரர்களின் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற் கொள்ளும் சந்தர்ப்பத்தில் - ஊடகங் கள் அதுகுறித்து வினவும்போது, தாம் அவ்வாறு கூறவில்லை எனவும் ஊடகங்கள் தான் அவற்றை திரிபு படுத்திவிட்டன என்று கூறுவதும் வோனுக்கு கைவந்த கலை.

இதற்கு சிறந்த உதாரணமாக முரளி குறித்து அவுஸ்ரேலியாவில் எதிர்மறைக் கருத்துக்களை வெளியிடு வதும், கொழும்பு வந்ததும் நான் அவ் வாறு கூறவில்லை என்று மழுப்பு வதும் சிறந்த எடுத்துக்காட்டு.

அவ்வாறே அவுஸ்ரேலிய அணித்தலைவர் றிக்கி பொண்டிங்கும் சில மாதங்களுக்கு முன் பங்களாதேஷின் டெஸ்ட் அந்தஸ்தை நீக்க வேண்டும் என்று போர்க் கொடி தூக்கினாலும் - அவ்வாறு தான் கூறியது தவறென்பதை தற்போது தான் உணர்ந்துள்ளதாகவும் பெருந் தன்மையுடன் ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே வாக்குச் சுத்தமில்லாத ஷேன்வோனை விட, றிக்கி பொண்டிங் ஒரு படி மேலே நிற்கிறார் என்றே தோன்றுகிறது.

பங்களாதேஷ் உடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்ரேலியா இனிங்ஸ் வெற்றி பெற்று, வெறும் மூன்றே நாட்களில் போட்டியை முடிவுக்கு கொண்டு வந்து விடும் என்ற நினைப்பே ரசிகர்களிடம் தூக்கலாக இருந்தது.

ஆனாலும் அதை பொய்யாக்கும் விதத்தில் முதல் நாள் ஆட்டத்திலேயே - கங்காருக்கள் பாணியிலேயே 355 ஓட்டங்களை குவித்து ரசிகர்களை கபளீகரம் செய்து விட்டனர் பங்களாதேஷ் அணியினர். ஆனாலும் டெஸ்ட் போட்டிகளில் ஒரு நாள் மாத்திரம் சிறப்பாக ஆடி எந்தப் பிரயோசனமும் இல்லை. 5 நாட்களும் சிறப்பாக ஆடினாலேயே போட்டி முடிவை தம்வச மாக்க முடியும் என்ற நிதர்சனத்தை இந்தப் போட்டி மீளவும் அவர்களுக்கு உணர்த்தியிருக் கிறது.

எது எப்படியோ, உலக சம்பியனுக்கு 5 நாட்களும் நெருக்கடி கொடுத்த எமது ஆசியப்பிராந் தியத்தின் குட்டி அணிக்கு 'ஒரு சலாம்' போட்டு எமது பாராட்டை தெரிவித்தே ஆக வேண்டும்.

ஜோசப் கிருஸ்ணாவின்

# ஒப்பீட்டுக்கப்பால் ஒரு மனிதன்

கண்டி அஸ்கிரிய மைதானத்தில் இலங்கை அணி பாகிஸ்தானை தனது இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் சந்தித்தவேளை, அது சனத் ஜெயசூர்யவின் டெஸ்ட் வாழ்வின் இறுதியாட்டமாக அமைந்திருந்தது. 36 வயதையடைந்துள்ள சனத் 1990/91இல் நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அறி முகமானார். அன்று முதல் இன்றுவரை 103 டெஸ்ட் போட்டிகளில் 174 இனிங்ஸ்கள் விளையாடி 6618 ஓட்டங்கள் சேகரித்தார். அதிகூடிய ஓட்ட மாக இந்தியாவுக்கு எதிராக 340 ஓட்டங்கள் பெற்றார். 14 சதங்கள் 29 அரைச் சதங்கள் என்றவாறு பட்டியல் நீண்டு செல்கிறது. இந்தப் பட்டியல்களு




சனத் ஜெயசூர்ய - மனிதன்

க்கு அப்பால் சனத் என்ற ஒரு மனிதம் ஓங்கி நின்றதை அன்றுமுதல் இன்றுவரை சகல கிரிக்கெட் ரசிகர்களும் நன்றாக அறிந்துகொண்டிருப்பார்கள். இவரது ஆரம்பம் சுகமானதாக இருக்கவில்லை. ஆனால், அவரது புன்னகை மாறவில்லை. இடையில் பல ஏற்ற இறக்கங்கள், தனிப்பட்ட வாழ்வில் கூடத்தான். மனிதர் மாறவில்லை. எந்தளவு கௌரவத்துடன் இலங்கை அணித் தலைமை கிடைத்ததோ, இவர் அந்தப் பதவியில் இருந்து இறங்கும் போதும் அதே கௌரவத்துடன்தான் இறங்கினார். (கங்கூலியின் ஞாபகம் ஏனோ சுமையாக வருகிறது) தன் தகுதிநிலை வீழ்ச்சி கண்டபோதும் அது தொடர்பில் ஊடகங்களில் விமர்சனக் குரல்கள் எழுந்தபோதும்கூட யாரையும் குறைகூறியோ, தன்னை நியாயப்படுத்தவோ முயலவில்லை.

இன்று ஓய்வு பெற்ற - போது இவரது கடந்தகால செயற்பாடுகள் எல்லாம் அசைபோடப்படும் போது சனத் எத்தகையதொரு நல்ல ஆத்மா என்பதே பேச்சாக இருக்கிறது. இறுதி டெஸ்ட் போட்டி யின் முதல் இனிங்ஸில் பெரிதாக சனத்தால் சாதிக்க இயலவில்லை. இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட இயலவில்லை. மேலும் ஆட்டம் இலங்கையணிக்குத் தோல் வியாக முடிந்தது. இருந்தும் இவை எல்லாவற்றையும்விட சனத்துக்கு கடும் காயத்துக் குள்ளாகியது ரசிகர்களுக்கு வேதனையாக இருந்தது.

ஏனெனில் இதற்கு முக்கியமானதொரு காரணம் இருக்கிறது. முன் னொரு சந்தர்ப்பத்தில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டமொன்றில் கையில் ஏற்பட்ட உபாதையால் இடையில் வெளியேறிய சனத், பின்னர் தன் பங்களிப்பு அணிக்குத் தேவை என்ற நிர்ப்பந்தத்தில் மீண்டும் மைதானத்துள் நுழைந்து தாங்கமுடியாத வலியுடன் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்கள் பெற்று அணியை வெற்றிப் பாதைக்குத் திருப்பிய சம்பவம் ஒன்று இருக்கிறது. சனத் என்றும் தன்னை முதன்மைப்படுத்த விரும்பியவர் அல்ல. அதேபோல இவரது பக்குவம் நிறைந்த நல்லியல்புகள் இவருக்கு எல்லாத் திசைகளில் இருந்தும் அழிக்க முடியாத செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறது.

இருந்தும், அவரது இறுதி டெஸ்ட் போட்டி பலவகைகளிலும் அவருக்கு மனச்சுமையாகப் போய்விட்டது என்பதும் உண்மைதான். எல்லாம் எப்போதும் நினைப்பதுபோல் நடந்துவிடுவ தில்லைதான். கிரிக்கெட் சகாப்தம் டொன் பிரட்மனின் இறுதி டெஸ்ட் போட்டியும் மிகத் துக்ககர மாகவே - ஒரு ஓட்டம் பெற்றால் சராசரி 100 - ஒரு ஓட்டம்கூடப் பெறமுடியாமல் ஆட்ட மிழந்து போய் விடவில்லையா. ஆனால் கிரிக்கெட் உலகில் டொன் பிரட்மன் ஒரு சகாப்தம் தான். அதேவகையில் பார்த்தால் சனத் ஜெயசூர்ய எதையும் இழந்து விடவில்லை. அவரது கிரிக்கெட் வாழ்வின் பெருமிதங்களுடனேயே விடை பெற்றுள்ளார். சனத் என்ற மனிதம் ரசிகர்களைப் பொறுத்து இதயத்தில் பதிந்த ஒன்று.






ஜெயராட்டின்

# நாடுகள் வேறு கதை ஒன்று

மெல்பேர்ண் நகரில் நடந்து முடிந்த கொமன்வெல்த் போட்டிகளில் 62kg எடைப்பிரிவில் தங்கம் வென்ற சிந்தன விதானகே பற்றி பேசும் போது - வெள்ளிப்பதக்கம் வென்ற இந்தியாவின் தமிழ் நாட்டு வீரர் அருண் முருகேசன் ஞாபகமும் கூடவே வரும். 62kg பிரிவில் ஒரே அளவு பளுவை இருவரும் தூக்கினாலும் அருண் முருகேசனின் நிறை 62kgஐ விட 8 கிராம்கள் அதிகமாக இருந்ததால் தங்கம் பெறும் வாய்ப்பை இவர் இழந்திருக்கிறார்.

இவரது குடும்பமே பளுதூக்கும் குடும்பம். இவரது சிறியதந்தை சந்திரசேகர் 1990, 1994,1998, கொமன்வெல்த் போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று பதக்கம் பெற்றவர். அருணின் தந்தையும் வசதிக்குறைவால் சீமெந்தால் செய்யப்பட்ட உருளைகளைக் கொண்டு பயிற்சி பெற்றவர்.






சிறுவன் அருண் இதே காலத்தில் அப்பாவுடன் சேர்ந்து உதவி செய்து இவனே பளுதூக்கும் வீரனாகி விட்டான். இன்று வெள்ளிப்பதக் கம் அருணின் சொந்தம்.

ஆனால் இந்த குடும்பத்துக்கு புகழ் நிறைய உண்டு. அது பொருளாதார ரீதியில் எந்த உயர்வையும் காட்டவில்லை. அதாவது தாங்கள் பெரிதா கக் கண்டு கொள்ளப்பட வில்லை என்கிறார் அரு ணின் தந்தை, சிறிய தந்தை ஆகியோர். அரு ணுக்கு என்ன நடக்க போகி றதோ தெரியவில்லை. கிரிக்கெட் வீரர்கள் தவிர ஏனைய விளையாட்டுத் துறைசார்ந்த இந்திய வீரர் கள் எல்லோரும் நிறையவே ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கிரிக்கெட் விளையாட்டே வேதம் என்று பூஜிக்கும் இந்தியாவில் இதுபோன்ற செயற்பாடுகள் தவிர்க்கமுடியாமல் இருப்பதை அருண் உணர்ந்தால் அவருக்கு நிம்மதி.

யசோவின்

# சரிவான பார்வை சரியில்லை


ஷேவாக் - இடையில் முறியும்.

அண்மைக்காலமாக இந்திய கிரிக்கெட் அணி முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதற்கு பயிற்சியாளர் சப்பல் மற்றும் அணித்தலைவர் ராவிட்டின் அணுகு முறைகள், வழி நடத்தல்களே காரணமெனத் தெரிவிக்கப் படுகிறது. எனினும் பிரச்சினைகளில் சிக்குப்படாமல் அவற்றை சுமுகமாக தீர்ப்பவர் என அனைவராலும் பேசப்படும் ராவிட்டின் அண்மைக்கால பேச்சுக்களும், செயற்பாடுகளும் திருப்திகரமான தாக இல்லை.

ஏனெனில், அணியில் இடம் கிடைக்க வேண்டுமெனில் வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்த வேண்டுமென குறிப்பிட்ட அவர், கங்கூலி மீண்டும் அணியில் இடம் பெற வேண்டுமாயின் உள்ளூர் போட்டிகளில் விளையாடி தனது திறமையை நிரூபிக்க வேண்டுமென் றார்.

அதே நேரம் தற்போது அணியில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் ஷேவாக், கைவ் இருவரும் அணியிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்கிறார். இதில் கைவ் துடுப்பாட்டத்தில் கோட்டை விட்டாலும் களத்தடுப்பில் கெட்டிக்காரர். ஆனால் ஷேவாக்கோ இரண்டிலுமே கோட்டை விட்டு வருகின்றார்.


கங்கூலி - உண்டு எதிர்காலம்

அவ்வாறெனில் ராவிட்டின் கூற்றுப்படி திறமையானவர்கள் அணியில் இடம் பெறுவதென்றால் ஷேவாக் மற்றும் கைவ் இருவரையும் அணியிலிருந்து இடைநிறுத்தி, உள்ளூர் போட்டிகளில் ஆடி திறமையை நிரூபிக்க ஏன் விடவில்லை? கங்கூலிக்கு ஒரு நியாயம், ஷேவாக், கைவ்விற்கு ஒரு நியாயத்தை ராவிட் ஏன் கடைப்பிடிக்கின்றார்? அப்படியெனில் ராவிட் எடுப்பார் கைப்பிள்ளையாகவா செயற்படுகின்றார்.

இந்த நிலையில் இங்கிலாந்துடன் நடைபெற்ற ஒருநாள் தொடரின் இர ண்டு ஆட்டங்களில் ராவிட்டுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு மோசமாக ஆடிவரும் ஷேவாக்கிற்கு கப்டன் பதவி வழங்கப்பட்டது எந்த வகையில் என்பது புரியாமல் உள்ளது. அவ்வாறு கப்டனாக நியமிக்கப்பட்ட ஷேவாக் அணித் தலைவர் என்ற சிறிதளவு பொறுப்புணர்வுமின்றி வெறும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அணி நெருக்கடியான நிலையில் இருக்கும்போது அணித்தலைவர் தனது அணியை காப்பாற்ற வேண்டியவராக உள்ளார். இதற்கு பாகிஸ்தானின் இன்ஸமாம் உல்ஹக் சிறந்த உதாரணம்.

இந்த நிலையில் தனது மோசமர்ன ஆட்டத்தை ஷேவாக், கைவ், எவ்வளவு காலத்துக்கு தொடரப்போகின்றார்கள்? திறமையான வீரர்களுக்கு அணியில் முன்னுரிமை எனக்கூறும் இந்திய தெரிவாளர்கள், இவர்களை கட்டியணைத்துக் கொண்டு எவ்வளவு காலம்தான் தமது நற்பணியைத் தொடரப்போகின்றார்கள் என்பதே. இன்றுள்ள கேள்வி என்பதுடன், அணித்தலைவர் ராவிட்டும், இதற்கு எத்தனைகாலம் தான் தனது ஆதரவையும் தெரிவிக்கப் போகின்றார் என்பதுதான் இன்னொரு கேள்வி.

லிவிங்ஸ்ரனின்

# கவசம் போர்த்த வீரர்

மைக்கல் ஹோல்டிங் 70 கள், 80 களில் வேகப்பந்து வீச்சில் கலக்கியவர். தற்போது தொலைக்காட்சி வர்ணனையாளர். இவர் வேகப்பந்து வீச்சைப் பற்றிப் பேசினால் அதில் ஒரு அர்த்தம் இருக்கும். அவர் ஒரு கருத்தை அழுத்தமாகக் கூறுகின் றார். ஒரு வேகப் பந்து வீச்சாளர் முறை தவறிப் பந்து வீசுவதையும், சரியான வேகப் பந்து வீச்சாளரையும் வெறும் கண்களால் இலகுவாக இனம்கண்டு கொள்ளலாம். இதற்காக நவீன இலத்திரனியல் கருவிகளுடன் போராட வேண்டிய அவசியம் இல்லை. மேலும் பிழை என்கிறார்கள், பின்னர் சரியான முறைக்கு பந்துவீச்சை மாற்றுகிறோம் என்கிறார்கள். பின்னர் மீண்டும் பிழை என்கிறார்கள். இந்த விடயத்தில் உண்மையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முறை தவறும் வீராகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் பயப் படுகிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது என்கிறார். எனவே, தைரியம் மிக்க அதிகாரிகள் இங்கு தேவைப்படுகிறார்கள் என்பது அவருடைய வாதம்.


இம்ரான் கான் - இடைக்காலப் பயன்.


மைக்கல் ஹோல்டிங் - முந்தைய தலைமுறைக் காட்டாறு.

ஹோல்டிங் 60 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 249 விக்கெட்டுக்கள் சரித்தவர். இன்றைய அட்டவணைகள் பற்றிப் பேசும் போது வெறுப்படைகிறார். இன்றைய நிலை போல் அன்றிருந்தால், என்னால் அதற்கு ஈடுகொடுத்திருக்க முடியாது என்பவர் - இன்றைக்கு கிரிக்கெட் அட்டவணைகள் வீரர்களுக்குப் பெரும் சுமையாகப் போய்விட்டது என்கிறார்.


மேலும் அன்றைய துடுப்பாட்ட வீரர்கள் இன்றைய வீரர்கள் போல கவசங்கள் பல அணிந்து மைதானத்துக்கு வருவதில்லை. இதனால் சில செக்கன்களில் பந்தைச் சரியாகக் கவனித்தே விளையாட வேண்டும். ஆனால், இன்று அப்படியல்ல. கவசங்களின் பாதுகாப்பு இருப்பதால் கவனக் குறைவாகக் கூட ஆடுவதை அவதானிக்கலாம். அதாவது சரியான நுட்பத்துடன் ஆடவில்லை என்று கூறலாம் என்பவர். இன்றைய நிலையில் சரியான துடுப்பாட்ட நுணுக்கத்தை அறிந்திருப்பவர் றிக்கி பொண்டிங் தான். சச்சின் ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன் அப்படித்தான் இருந்தார். ஆனால் இன்று கவனச் சிதறல் தெரிகிறது என்கிறார்.

தான் ஒரு நடு நடுங்கவைக்கும் வேகப் பந்து வீச்சாளராக இருந்தும் கூட, தன் காலத்துச் சிறந்த பந்து வீச்சாளர்களாக டெனிஸ் லிலியையும், இம்ரான் கானையும் குறிப்பிடுகிறார்.

நிர்மலனின்

# அவசரம் சத்திரசிகிச்சை

தென்னிலங்கை கிரிக்கெட் ரசிகர் ஒருவர் இலங்கை கிரிக்கெட் அணியை எவ்வாறு நிமிர்த்தலாம் என்பது பற்றி தன் கருத்துக்களை மிகத்துலாம்பரமாக எடுத்துக்கூறுகிறார். குறிப்பாக தெரிவுக்குழு எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதை பற்றி எடுத்துக்கூறும் போது சர்வதேச நிலையில் கிரிக்கெட் விளையாடியவர்களே தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க வேண்டும்.


ஹாபீல்ட் சோபர்ஸ் - யார் ஈடாவார்?

அதுவும் ஒவ்வொரு துறையில் பிரகாசித்தவர்கள் மிகவும் பொருத்தம் என்கிறார். மேலும் இன்றைய கிரிக்கெட் தாற்பரியங்களை புரிந்துகொண்டவர்கள் தான் இதற்கு மிகப்பொருத்தம் என்கிறார். இதனைத் தொடர்ந்து இப்போதுள்ள தெரிவுக்குழுவின் தகுதி நிலை பற்றி சில கேள்விகளை எழுப்புகிறார். இந்த வகையில் மஹேல மற்றும் சமிந்தவாஸ் இருவரையும் உபதலைவர் பதவியின் பொருட்டு பிழையாக காய் நகர்த்தி தன்மூலம் இருவருக்குமே மனஉளைச்சலை ஏற்படுத்திய பிழையான அணுகு முறையைச் சாடுகின்றார். தொடர்ந்து, இன்று உள்வாங்கப்பட் டிருக்கும் இளம் தலைமுறை வீரர்களை எவ்வாறு பக்குவப்படுத்த வேண்டும், இனம் காணப்பட்டு புறந்தள் ளப்பட்டிருக்கும் திறமைசாலிகளுக்கு எவ்வாறு கதவுகளை திறந்துவிடவேண்டும் என்றும் கூறுகிறார்.


மஹேல - சற்றுப் பின்னால் பார்.

மேலும் கிரிக்கெட் வீரர்கள் அவசியம் வாசிக்கவேண்டிய ஒரு புத்தகம் என்று சேர்.காபீல்ட் சோபர்ஸ் எழுதிய எனது சுயசரிதை MY AUTO BIOGRAPHY நூலை குறிப்பிடுகின்றார். கிரிக்கெட்டின் எந்தத்துறை பற்றியும் விளங்கிக்கொள்ள இந்த நூல் சரியான தொரு வழிகாட்டி யென்றும் அவர் கூறிப்பிடுகிறார். அந்த நூலின் ஒரு பக்கத்தில் பந்து வீச்சுப்பற்றி எழுதியுள்ள சோபர்ஸ் - எனது பந்துவீச்சின் போது உதிரி ஓட்டங்கள் பற்றி மிகக் கவனமாக இருந்துள்ளேன். எனது கிரிக்கெட் வாழ்வில் நான் பத்து பன்னிரண்டு NO BALL போட்டிருப் பேனா என்பது கூட சந்தேகம் தான். இது மிகவும் விசேடமானது. இதற்கு LINE AND LENGTH எப்போதும் பேணப்பட வேண்டும். சரியான பந்துவீச் சென்பது LINE AND LENGTH ஐ பின்பற்றி பந்து வீசுவதுதான் என்று கூறியுள்ளார்.

மொத்தத்தில் ஒரு நல்ல புத்தகம் பற்றி கிரிக்கெட் வீரர்களுக்கு எடுத்துக்கூறியிருக்கும் இவர் - இன்னொரு புறம் இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் கையறு நிலையை அழகாக எடுத்துக்கூறியுள்ளார். இந்த விடயங்களை பிரசுரித்திருந்த DAILY MIRROR பத்திரி கைக்கு நன்றி.

# உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் சுழற்சி முறையில் கடன் வழங்கும் நிகழ்வு!

பூநகரி—

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் சுழற்சி முறையிலான கடன்தொகை வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில், கௌதாரிமுனை பொதுநோக்கு மண்டபத்தில் ஊரக மேம்பாட்டுக்குழுத் தலைவர் பொ.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, கடற்தொழிலாளர்களுக்கான கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பயனாளி ஒருவருக்கு தலா முப்பதாயிரம் ரூபா வீதம் 10 பயனாளிகளுக்கும் 3 லட்சம் ரூபா நிதித்தொகையும், சிறு வியாபாரம் செய்வதற்கென பயனாளி ஒருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் நான்கு பயனாளிகளுக் கும் ஒரு லட்சம் ரூபா நிதித்தொகையுமாக, மொத்தம் 4 லட்சம் ரூபா நிதித் தொகை ஊக்குவிப்பாக வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத் தலைவர் பஞ்சாட்சரம், கௌதாரி முனை கிராம சேவையாளர் சுப்பிரமணியம், மாதர்சங்கத்தைச் சார்ந்தவர்கள், ஊரகமேம்பாட்டுகுழுவைச் சார்ந்தவர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், கிராம மக்கள், இணைப்பாளர், பணியாளர்கள், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனப் பணியாளர்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

போர்ச்சூழல் காரணமாகவும், சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகவும் சமூகப் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களை இனங்கண்டு, இந்த சுழற்சி முறையிலான கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமான யு.என்.டி.பி (UNDP) நிறுவன நிதிப்பங்களிப்புடனேயே, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் இந்தக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நிகொட் நிறுவன வீட்டு திட்டத்தின் மூலம் மன்னார் மாதர் ஒன்றியத்துக்கு 50 வீடுகள்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் நிகொட் நிறுவனத்தால் மாதர் ஒன்றியத்துக்கு 50 வீடுகளை வீட்டுத்திட்டத்தின் மூலம் வழங்கியுள்ளது.

இதன் காரணமாக மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத்தில் அங்கத்துவராகவுள்ள வறுமைக்கோட்டிலுள்ள குடும்பங்களை இனம்கண்டு, அவர்களுக்கு 50 வீடமைப்புத்திட்டம் என்ற அடிப்படையில் 50 வீடுகளை மாதர் ஒன்றியத்துக்கு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு வீடும் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தது.

இந்த 50 வீடுகளும் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் சிபாரிசுக்கமைய பள்ளிமுனை, தாழ்வுபாடு, மூர்வீதி, வங்காலை, பேசாலை, தலைமன்னார் போன்ற கிராமங்களிலுள்ள வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (201)

# முல்லைத்தீவு–வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் நாட்டுப்பற்றாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு!

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - மல்லாவிப் பிரதேசத்திலும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலும் நாட்டுப்பற்றாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

மல்லாவி பிரதேசத்தில் பாலிநகர்க் கிராமத்தைச் சோந்த நாட்டுப்பற்றாளர்களின் குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பாலிநகர் பிரதேச பொறுப்பாளர் பருதியன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரை மல்லாவி [illegible] அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கும், நாட்டுப்பற்றாளர்களின் திருவுருவப்படங்களுக்கும் ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

இதில் நாட்டுப்பற்றாளர்களின் குடும்பங்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்புரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் நிகழ்த்தினார்.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நாட்டுப்பற்றாளர்களின் குடும்பத்தினரைக் கௌரவிக்கும் நிகழ்வு உடுத்துறை பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் இசையூரான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் தளபதிகளில் ஒருவரான கலாத்தன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் - வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட அனைத்து நாட்டுப்பற்றாளர்களின் குடும்பத்தவர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# புத்தாண்டை முன்னிட்டு ஏ.9 வீதியில் சிரமதானம்

கிளிநொச்சி—

அன்னைபூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலில், தமிழீழ காவல் துறையினரின் பிரதான பங்களிப்புடன், கரைச்சிப் பிரதேச சபையினரும் இணைந்து கிளிநொச்சி ஏ.9 பிரதான வீதியையும், அதனை அண்டிய பிரதேசங்களையும் துப்புரவாக்கும் நோக்குடன் சிரமதானப பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் கிளிநொச்சி பொதுச்சந்தையின் உட்புற, வெளிப்புறப் பகுதிகள் முழுமையாக சிரமதானப் பணிகள் மூலம் தூய்மைப்படுத்தப்பட்டன.

இதில் தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள், சுகாதார சேவை இணைப்பாளர்கள், பிரதேச சபை ஊழியர்கள் என 70 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.





வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் - அணிவகுப்பில் முதலாம் இடத்தைப் பெற்ற இல்லத்துக்கு கரைச்சிப் பிரதேச சபையைச் சேர்ந்த க.சுலோசினி பரிசில் வழங்குவதையும், இடைவேளை நிகழ்வாக நடைபெற்ற இசையும், அசைவும் நிகழ்வையும் படங்களில் காணலாம்.

படம்:- இராமநாதபுரம் செய்தியாளர்

# வத்திராயன் கிராம மக்களுக்கு வீட்டுக்கு அடிக்கல் நாட்டப்படவில்லை

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்கு - வத்திராயன் கிராம மக்களுக்கு சுனாமி கடல் அனர்த்தம் ஏற்பட்டு 15 மாதங்கள் கடந்த நிலையில், இதுவரையில் நிரந்தர வீட்டுக்கான அடிக்கல் நாட்டப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்துக்கென சொலிடார் நிறுவனத்தால் 399 வீடுகள் அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், 1996 ஆம் ஆண்டு சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின் போது இந்தப் பிரதேசத்தை இராணுவம் ஆக்கிரமித்து, பெருமளவான வெடிபொருட்களை புதைத்துள்ளனர். இதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு ஓயாத அலை 3 நடவடிக்கை மூலம் இந்தப் பிரதேசம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் 300 மீற்றர் தூரத்துக்கப்பால் வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொடுப்பதற்கு இங்கு வெடி பொருட்கள் அதிகமாக காணப்படுகின்றது என சொலிடார் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் விசனமடைந்த மக்கள் வெடி பொருட்கள் அகற்றப்பட்ட பிரதேசத்தில் அடிக்கல்லை நாட்டி, வீடுகளை அமைத்துத் தருமாறு கேட்டுள்ளனர். இதற்கு மனித நேய அமைப்பு இந்தப் பிரதேசத்தில் முற்றுமுழுதான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளது என சொலிடார் நிறுவனத்தினர் தெரிவித்தால் தாம் அடிக்கல்லை நாட்டி, வீடுகளை அமைத்து தருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்கள் கடந்த மழைக் காலத்தில் பல்வேறு துன்பங்களை எதிர் கொண்டதாகவும், இனிவரும் காலங்களிலும் இவ்வாறான துயரங்களை எதிர்கொள்ள வேண்டிவரும் எனக் கவலை தெரிவித்துள்ளனர். (கு)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கௌரவிப்பு நிகழ்வுகள்

வட்டக்கச்சி—

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, நாட்டுப்பற்றாளர் கௌரவிப்பு நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு வட்டக்கச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வட்டக்கச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், தளபதிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (09)

### நகைகள் கொள்ளை

வவுனியா—

வவுனியா குடியிருப்புப் பகுதியில் கடந்த புதன்கிழமை வீடு ஒன்றில் புகுந்த ஆயுததாரிகளால் ஆயுத முனையில் ஒரு தொகுதி பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

வவுனியா பொதுமருத்துவமனையின் பின்னுள்ள மக்கள் குடியிருப்பில், தெய்வேந்திரம் என்பவரின் வீட்டில் புகுந்த ஆயுததாரிகளாலேயே வீட்டிலுள்ள நகைகள், இலத்திரனியல் பொருட்கள் என்பன கொள்ளையடிக்கப்பட்டன. (கு)

### கள்வர் நடமாட்டம் அதிகரிப்பு!

மன்னார்—

மன்னார் பிரதேசத்தில் கள்வர்களின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.

தனியார் கல்வி நிலையங்கள், வங்கி, வைத்தியசாலை, சந்தை போன்ற இடங்களில் தரித்து வைக்கப்பட்ட சைக்கிள்கள் கடந்த சில நாட்களாக காணாமல் போயுள்ளன.

கடந்த [illegible] ஆம் திகதி மட்டும் 9 சைக்கிள்கள் காணாமல் போயுள்ளன. இது தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், இதுவரையில் பயன் எதுவும் கிடைக்கவில்லை. (201)

### மணலுக்கு தட்டுப்பாடு

மன்னார்—

மன்னார் பிரதேசத்தில் தற்போது படு மணலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மணல் அகழ்வு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியான தோட்டவெளியில் அகழ்வு செய்யப்பட்ட போதிலும், சிறுமணலே காணப்பட்டது.

சிறுமணல் கட்டடங்கள், பூச்சுக்கு மட்டுமே உகந்தது. கட்டட வேலை, கல் அரிவதற்கு பாரிய கட்டட வேலைக்கும் இந்த மணல் நல்லதல்ல.

இதனால், படுமணல் இல்லாத காரணத்தால் பல கட்டட வேலைத் திட்டங்கள் மந்த கதியில் காணப்படுகின்றது. (201)

### புதிய அதிபர் நியமனம்

மன்னார்—

மன்னார் - முருங்கன் மத்திய மகாவித்தியாலயத்தில் புதிய அதிபராக எஸ்.றெமிசியஸ் பீரிஸ் 01.04.2006 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார்.

அதிபர் தரம் II ஐச் சேர்ந்த இவர், மன்னார் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றியவர். முன்னர் முருங்கன் மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திருமதி எஸ்.செபஸ்தியான் கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்திபெற்று, மன்னார் கல்விப் பணிமனைக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (201)

# விசேட கொடுப்பனவு அதிகரிப்பு!

மன்னார்—

மன்னார் ஐக்கிய கிராம அலுவலர்கள் சங்கத்தின் பயனாக - அகில இலங்கை ரீதியாக கிராம அலுவலர்களின் விசேட கொடுப்பனவுகள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அதிகரித்துள்ளது.

75 ரூபாவாக இருந்த மாதாந்த பைபிக்கல் கொடுப்பனவு 200 ரூபாவாகவும், ஆயிரம் ரூபாவாக இருந்த சீருடை கொடுப்பனவு 2 ஆயிரத்து 50 ரூபாவாகவும், 200 ரூபாவாக இருந்த பிரயாண கொடுப்பனவு 500 ரூபாவாகவும், 300 ரூபாவாக இருந்த அலுவலக வாடகை கிராம புறத்துக்கு 500 ரூபாவாகவும், நகர்ப்புறத்துக்கு 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன

# அடிப்படை வசதிகளற்ற நிலையில்!

மன்னார்—

மன்னார் - தட்சணா மருதமடுக் கிராம மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மருத்துவம், போக்குவரத்து, குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடிகளைத் தொடர்ந்தும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 8 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மடுப்பிரசேத்துக்கே செல்ல வேண்டிய நிலையுள்ளது.

இந்தக் கிராமத்தில் 80 குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் தொடர்ந்தும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

- திருக்குறள்.

## நமது நோக்கு

# 'கோமா'வில் யுத்த நிறுத்தம்

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் மீதும், விடுதலைப் புலிகள் மீதும் துணை ஆயுதக்குழுக்கள் நடத்தும் தாக்குதல்கள், படுகொலைகள் ஒருபுறம் -திருகோணமலையில் அரசபடைகளின் ஆசீர் வாதத்துடன் நடைபெறும் தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் இன்னொருபுறம் -

ஜெனிவாப் பேச்சுக்களுக்கான புற ஒழுங்குகளைச் செய்யாமல் இழுத்தடிப்பது இன்னொரு புறமாக, சமாதான சூழலுக்கு அரசு தொடர்ந்தும் குந்தகத்தை ஏற்படுத்தி வருகிறது.

தமிழ்மக்கள் மீதான தாக்குதல்கள், இன வன்முறைகள் கட்டுப்பாடின்றி பெருகிவருகின்ற நிலையில் - ஜெனிவாப் பேச்சுக்கான வாய்ப்புக்கள் குறைவடைந்து செல்வதை அவதானிக்கமுடிகிறது.

சர்வதேச சமூகத்தின் முன்பாக ஏதோ விட்டுக் கொடுப்பதுபோல நடந்து கொள்வது - இணக்கப்பாட்டை ஏற்றதுபோல பாசாங்குசெய்வது என்று அரசு ஒரு முகத்தையும், அதனை நடைமுறைப் படுத்தாமல் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதும் - புலிகள் மீதும் தாக்குதல்கள், படுகொலைகளை நிகழ்த்துவதென இன்னொரு முகத்தையும் அரசு காட்டுகின்றது.

இந்த நிலையில், துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதக் களைவு விவகாரத்தை அப்படியே தூக்கி எறிந்துவிட்டு, அவர்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது அரசு.

அதைவிட, புலிகளின் தளபதிகளது கடல்பயண விவகாரத்திலும் அரசும், படைகளும் உண்மைத் தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இந்த நிலையில், திருகோணமலையில் தமிழ் மக்களை கதறக் கதற கொன்று குவித்து, வீதியில் போட்டு எரித்து - அவர்களின் சொத்துக்கள், உடமைகளைத் தீயிட்டு எரித்து சிங்கள பௌத்த பேரினவாதிகள் அரச படைகளுடன் இணைந்து ஊழித் தாண்டவம் ஆடியுள்ளனர்.

இவையெல்லாம் தமிழ் மக்கள் பெரும் விரக்தியும், விசனமும் கொள்ளவைக்கும் சம்பவங்களாகவே உள்ளன. சாதாரணமாக சந்தியிலோ, வீதியிலோ சந்திக்கும் இருவர் அரசியல் குறித்துப் பேசினால் - 'இவர்களுக்கு அடிதான் ஒரே மருந்து' எனப் பேசப்படும் நிலை தோன்றியிருக்கிறது.

இந்த நிலை உருவாகுவதற்கான முழுப் பொறுப்புமே அரசாங்கத்தைத்தான் சாரும். சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களை ஒவ்வொன்றாக நழுவவிடுவதில் அரசு தீவிரமாக இருக்கிறது.

கடைசியாக நேற்று விடுதலைப் புலிகளின் தளபதிகளது கடற் பயண விவகாரம் கூட - அரசும், கடற்படையும் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளுக்கு முரணாக நடந்து, புதிய நிபந்தனைகளை விதித்ததால் அதுவும் ரத்தானது.

அதாவது, ஜெனிவாவுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் என்பது இப்போது இல்லை என்ற கட்டத்தை அடைந்துகொண்டிருக்கிறது.

புலிகளின் தளபதிகளது கடற்பயணத்துக்கு குறுக்கீடு விளைவிக்கப்பட்டதானது - எப்படியாவது புலிகளை பேச்சு மேசையில் இருந்து அகற்றுவதற்கான முயற்சியாகவே கருதப்படுகிறது.


இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு புலிகள் சார்பில் எழுதப்பட்டிருக்கும் கடிதத்தில் - அரசு யுத்தநிறுத்த சூழலை இல்லாததாக்கவே முனைவதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் அமைதி முயற்சிகள் மரணப் படுக்கைக்குச் சென்று கொண்டிருப்பததைத்தான் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சமாதான முயற்சிகளுக்குச் சாதகமான அணுகுமுறைகளை அரசு கடைப்பிடிக்கத் தவறுவதன் விளைவாகவே இவை நடந்தேறுகின்றன.

மரணப் படுக்கையிலிருக்கும் சமாதான முயற்சிகளை மீட்டெடுக்கும் முயற்சி என்பது இன்று கடினமான பணியாகவே உள்ளது. ஏனெனில் இப்போது இந்த யுத்தநிறுத்தம் கோமா நிலைக்குச் சென்று விட்டதையே உணர முடிகிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# இனப்படுகொலைகளை நிறுத்த இந்திய அரசு எச்சரிக்கவேண்டும்

## பழ. நெடுமாறன் வேண்டுகோள்



சென்னை —

திருகோணமலையிலிருந்து தமிழர்கள் படுகொலை செய்யப் படுவதைத் தடுத்துநிறுத்த - இலங்கை அரசாங்கத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எச்சரிக்க வேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஓவியர் புகழேந்தியின் "தமிழீழம் - நான் கண்டதும் என் னைக் கண்டதும்" நூல் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கடந்த சில ஆண்டுகளாக பழ.நெடுமாறன் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுவதற்கும் ஊடகங்களுக்கு நேர்காணல் அளிப்பதற்கும் இந்திய, தமிழக அரசாங்கங்கள் தடைவிதித்து வாய்ப் பூட்டுச் சட்டம் போட்டிருந்தன.

அண்மையில் குறிப்பிட்ட காலத்துக்கு பொதுக்கூட்டங்களில் உரையாற்ற பழ.நெடுமாறனுக்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

ஓவியர் புகழேந்தியின் நூல் வெளியீட்டு விழா நிகழ்வுக்குத் தலைமை வகித்து பழ.நெடுமாறன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது;

எமக்கு அருகாமையில் 20 மைலுக்கு அருகில் இருக்கும் நம்முடைய சகோதரர்கள், நம்முடைய தமிழீழ மக்கள் அங்கே நடத்தி வருகிற போராட்டத்தை, அதனது விளைவுகளை அந்த மக்களின் சொல்லொண்ணாத் துயரங்களை ஓவியங்களாக வடித்து இங்கே தமிழகத்திலும், இந்தியாவின் பிறபகுதிகளிலும், உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் கண்காட்சிகளாக நடத்தி இருக்கிறார் ஓவியர் புகழேந்தி.

ஆனாலும், எந்த மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தை ஓவியங்களாக வரைந்தாரோ அந்த மக்கள் - தமிழீழ மக்கள் அவரது ஓவியங்களைப் பார்த்து மகிழக் கூடிய வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அந்தக் குறையும் சென்ற ஆண்டு தீர்ந்தது.

இங்கிருந்து தமிழீழத்துக்கு அந்த ஓவியங்களை எடுத்துச் சென்று, எந்த மக்களின் துயரங்களை ஓவியமாக வடித்தாரோ எந்த மக்களினது வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்தை ஓவியங்களாக வடித்தாரோ அந்த மக்கள் முன்னாலே அவர் வைத்து அவர்களின் ஆதரவைப் பெற்றுத் திரும்பியிருக்கிறார்.

அந்த மக்களின் போராட்டத்தை நேரில் சென்று பார்த்து முழுமையாக அறிந்து கொண்டதோடு - சமூகப் பிரச்சினைகளையும் அறிந்து கொண்டு வந்து நூலாகவும் வடித்திருக்கிறார்.

20ஆம் நூற்றாண்டில் உலகெங்கும் எத்தனையோ விடுதலைப் போராட்டங்கள் நடந்தன. அந்த விடுதலைப் போராட்டத்தில் முக்கியமானது வியட்நாம் விடுதலைப் போராட்டம். அந்தப் போராட்டம் பற்றி ஆங்கில மொழியிலும், பிறமொழியிலும் ஏராளமான நூல்கள் வெளியாகி உள்ளன.

அதேபோல, சீனத்திலே மாபெரும் தலைவர் மாவோவின் தலைமையில் நடைபெற்ற மகத்தான போராட்டம் பற்றி எத்தனையோ நூல்கள் வெளிவந்திருக்கின்றன. எத்தனையோ வெளிநாட்டவர்கள் வியந்து அதைப் பற்றி எழுதி இருக்கின்றனர்.

யசீர் அரபாத் தலைமையிலேயே பலஸ்தீன விடுதலைப் போராட்டம் பற்றியும் அதனது விளைவுகள் பற்றியும் ஏராளமான நூல்கள் வந்திருக்கின்றன.

அதைப் போலவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றி ஏராளமான நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியாகியுள்ளன.

ஆனால், அந்த நூல்களை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் அறியாதபடி இங்கே சட்டங்கள் தடுக்கின்றன.

நான் எழுதிய நூல்களுக்கும் தடை - வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த கெடுபிடிகளுக்குக் கொஞ்சமும் அஞ்சாமல் அந்த மண்ணுக்குச் சென்று, அந்த வீரஞ்செறிந்த மண்ணை சுற்றி வந்து, மக்களைப் பார்த்து, அவர்களது துயரங்களையெல்லாம் அறிந்து வந்து அதையெல்லாம் ஒரு நூலாக இந்தக் கால கட்டத்திலே வடித்திருப்பது என்பது சிறப்பானது மட்டுமல்ல - துணிவுமிக்கதும் ஆகும்.

தமிழீழ மக்களுக்காக அங்குசென்று ஓவியக் கண்காட்சிகளை நடத்தியதோடு - அந்த மக்களினது நிலைமைகளைப் பற்றிய உண்மைகளையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்று அவர் வெளியிட்டிருக்கிற இந்தத் தருணத்தைவிட, அங்கே தமிழீழத்தில் இருந்து வரக்கூடிய செய்திகள் நம்முடைய நெஞ்சைப் பிளக்கின்றன.

தமிழீழத்தின் திருகோணமலையில் சிங்கள இராணுவத்தின் வெறியாட்டத்தின் விளைவாக 19 தமிழர்கள் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். அது மட்டுமல்ல எது எது தமிழரின் வியாபார, வணிக நிலையங்களோ அவையெல்லாம் அடித்து நொறுக்கப் பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

அங்கே ஒரு பெரிய இனவெறிக் கலவரம் இராணுவத்தினாலும், அரசாங்கத்தாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே மக்கள் பல்வேறு சொல்லொணா கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளனர்.

ஜெனிவாவிலே பேச்சுவார்த்தை நடந்தது. அந்தப் பேச்சுவார்த்தையின் விளைவாக சுமுகமான உடன்பாடு ஏற்பட்டது. அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறக்கூடிய நிலையில் - இனவெறிக் கலவரத்தை மீண்டும் திட்டமிட்டுத் தொடங்கியிருக்கிறார்கள் எனில், அவர்களுக்குச் சமாதானத்தில் நம்பிக்கை இல்லை என்பதுதான் இதன்மூலம் தெரிய வருகிறது.

உலக நாடுகளை ஒரு பக்கம் ஏமாற்றிக் கொண்டு, மற்றொரு பக்கத்தில் திட்டமிட்ட இனவெறிப் படுகொலைகளை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். உலகம் இதை உணர வேண்டும்.

குறிப்பாக இந்திய அரசு இதை உணர வேண்டும். அதிலும் நீங்கள் பார்த்தால் திருகோணமலையில் மட்டுமல்ல - அருகிலே உள்ள சம்பூரில் சிங்களக் கடற்படையினர் ஏவுகணைகளை ஏவி கிராமத்தைத் தாக்கியுள்ளனர். வீடுகள் பற்றி எரிந்திருக்கின்றன. 2 தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கலவரச் சூழ்நிலையில் அங்கே திருகோணமலையிலே தமிழ் மக்கள் பேரவைத் தலைவராக இருந்த வன்னியசிங்கம் விக்னேஸ்வரன், இலங்கை வங்கிக்குப் போகிறார்.

திருகோணலையில் அந்த வங்கி எங்கே அமைந்திருக்கிறது எனில்;-

இரண்டு பக்கமும் இராணுவச் சோதனைச் சாவடிகள் - அந்த வங்கிக்கு எதிரே திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையம்- அதற்குப் பக்கத்திலே கடற்படைத் தலைமை அலுவலகம்- இவ்வளவும் இருக்கக்கூடிய அந்த இடத்தில் அவர் வங்கிக்குப் போகிறார் - வங்கியிலே நுழைகிறார் - வங்கிலேயே வைத்து அவரைச் சுட்டுத் தள்ளுகிறார்கள்.

வெளியே இராணுவம், பொலிஸ் இருக்கிறது. எதிரிலே பொலிஸ் நிலையம் இருக்கிறது. ஆனால், சுட்டவர்கள் வங்கிக்குள்ளேயே ஓடுகிறார்கள். வங்கிக்குப் பின்னாலே சிங்கள இரகசியப் பிரிவு பொலிஸ் அலுவலகம் உள்ளது. அதற்குள் ஓடி ஒளிகிறார்கள்.

இன்று வரை அந்தக் கொலையாளிகளைப் பிடிப்பதற்கோ யார் என்று அறிவதற்கோ எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை.

திட்டமிட்டு சிங்கள அரசு இந்தப் படுகொலையைச் [illegible]சய்கிறது. எதனால் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்படுகிறார்? அண்மையில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்மஸ் அன்று தேவாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருக்கும்போது அங்கேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் இடத்துக்கு வன்னியசிங்கம் விக்னேஸ்வரனை நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட இருந்தது. அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே அவரை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதற்காக ஒழித்துக் கட்டியிருக்கிறார்கள்.

திருகோணலை முழுவதுமே தமிழர் பகுதியிலே அமைந்திருக்கக் கூடிய இயற்கையான துறைமுகம் நீண்ட நெடுங்காலமாக அந்தத் திருகோணமலை துறைமுகத்தின் மீது அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கு ஒரு கண் இருந்துகொண்டே இருக்கிறது.


அமெரிக்காவின் கடற்படையை அங்கே நிறுவத் தொடர்ந்து முயற்சிகள் நடந்தன.

(தொடரும்)

**தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் "ஆனந்த விகடன்" வார இதழில் வெளியாகியுள்ள அன்ரன் பாலசிங்கத்தின் நேர் காணலின் இரண்டாவது பகுதி →**

# பாகிஸ்தான் சீனா தலையீட்டால் இந்தியாவுக்கு ஆபத்து வரும்!

## பிரபாகரனின் திருமணத்தை நடத்தி வைத்தவர் அன்ரன் பாலசிங்கம்தான்!



அந்த நிகழ்வை அழகாக விவரிக்கிறார்... ''அப்போது பிரபாகரனுடன் நானும் சென்னையில் இருந்தேன். இந்தியா கொடுக்கிற இராணுவப் பயிற்சியை முறையாகப் பயன்படுத்துவதிலும், சரியான திட்டமிடலோடு பணியாற்றுவதிலும் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார் பிரபாகரன்.

இந்த நிலையில், திருவான்மியூரில் நாங்கள் வசித்த வீட்டுக்கு மதி, வினோஜா, ஜெயா, லலிதா என்ற நான்கு இளம் பெண்கள் வந்தனர். யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்த இந்த நால்வரையும்- சிங்கள இராணுவத்திடமிருந்து காப்பாற்றி சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள் போராளிகள். இந்தப் பெண்களுக்குக் குடும்பமோ, உறவுகளோ இல்லாத நிலையில், பிரபாகரன் இந்த நால்வரின் நலனிலும் அக்கறையுடன் இருந்தார். இந்தப் பெண்களின் வருகை, புலிகள் இயக்கத்துக்குள் ஒரு குட்டிப் புரட்சி ஏற்படக் காரணமாகும் என்று முதலில் நான் நினைக்கவில்லை.

எங்களுடைய அமைப்பைப் பொறுத்தவரை, யாழ்ப்பாண இந்து மரபில் பேணக்கூடிய ஒழுக்கக் கோட்பாடுகள் எல்லாமே கண்டிப்பாகவும், கறாராகவும் கடைப்பிடிக்கப்பட்டன. திருமணத்துக்கு முன் ஓர் ஆணும், பெண்ணும் தனித்தனியே பிரிந்துதான் வாழவேண்டும் என்ற கோட்பாட்டைப் போராளிகளும் பேணினார்கள். மக்களிடையே பரந்த ஆதரவைப் பெற வேண்டுமானால், இந்தச் சமூகப் பண்பாட்டு அம்சத்துக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதில் பிரபாகரன் கவனமாக இருந்தார்.

இந்த ஒழுக்கக் கோட்பாட்டில் எனக்கும் உடன்பாடுதான். ஆனால், இந்த ஒழுக்க விதிகள் நெகிழ்ச்சித் தன்மை இல்லாமல் இறுக்கமாக இருப்பதில் உடன்பாடில்லை. பிடிவாதத் தால் பேணப்படும் கட்டுப்பாடுகளைக் கட்டாயத் தால் கடைப்பிடித்தால், இயற்கை தன்போக்கில் ஆண் - பெண் உறவைத் தோற்றுவிக்கும். எங்கள் தலைவரின் விஷயத்திலும் இதுதான் நடந்தது. வந்த நான்கு பெண்களில் மதி என்கிற மதிவதனியிடம் ஆழ்ந்த காதல் வயப்பட்டார் பிரபாகரன்.

மதியையும், பிரபாகரனையும் திருமண வாழ்க்கையில் இணைத்து வைக்கும் பொறுப்பு எனக்கும், அடேலுக்கும் இருந்தது. அமைப்பின் மூத்த உறுப்பினர்கள் இந்தக் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களிடம் தமிழ்ச் சமூகத்தில் காதலுக்குள்ள முக்கியத்துவத்தை எடுத்துப் பேசினேன். மிகுந்த தயக்கத்துக்குப் பிறகு ஒப்புக் கொண்டார்கள்.

1984இல் திருப்போரூர் கோயிலில், பிரபாகரனின் திருமணத்தை தமிழ் முறைப்படி நடத்தி வைத்தோம். ஒரு காதல் திருமணமாக பிரபாகரனின் திருமணம் நடந்தது புலிகளிடையே நல்ல பல மாற்றங்களைத் தோற்றுவித்தது. இன்றைக்குப் போராளிகளுக்கிடையே காதல் திருமணங்கள் சாதாரணமாக நிகழ்வதற்கு மதி - பிரபாகரன் காதல் திருமணம் கூட ஒரு காரணமாக இருக்கலாம்'' என்று தன் நெருங்கிய நண்பனின் காதல் கதையை விவரித்துச் சிரிக்கிறார்.

பேச்சு தற்போதைய சூழல் பற்றித் திரும்புகிறது. மிகுந்த நிதானத்துடனும், கவலையுடனும் பேசுகிறார் அன்ரன் பாலசிங்கம்.

**"இலங்கைப் பிரச்சினையில் இந்தியா விலகியிருப்பதால் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் சில சுயநலன்களோடு இந்தப் பிரச்சினையில் தலையிடக்கூடும் என்று புலிகள் நினைக்கிறார்களாமே?"**

''ஆம்! எங்களைப் பொறுத்த வரையில், இதற்கான ஒரு புறச்சூழல் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். தற்போதைய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தானுடனும், சீனாவுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர். சில மாதங்களுக்கு முன் அவர் இந்தியா வந்து, இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டுத் தங்களுக்கு உதவ வேண்டும் என்று கோரினார். ''நீங்கள் சமாதான வழியில் ஓர் அரசியல் தீர்வை முன்வைத்து இந்தப் பிரச்சினையைத் தீருங்கள். அதைத் தான் நாங்கள் விரும்புகிறோம்'' என்று கைவிரித்துவிட்டது இந்தியா.

தற்போது பாகிஸ்தானிடமும், சீனாவிடமும் ஆயுதங்களை வாங்கி சிங்கள இராணுவத்தைப் பலப்படுத்தி, புலிகளுக்கு எதிராக ஒரு யுத்தத்தை தொடங்கத் திட்டமிட்டிருக்கிறது இலங்கை அரசு. அத்ற்காகத்தான் ஜனாதிபதி ராஜபக்ஷ போனவாரம் பாகிஸ்தான் சென்றார். அங்கே ஒரு இரகசிய இராணுவ ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் ஆயுதங்களைப் பெற்று இராணுவத்தைப் பலப்படுத்தி புலிகளுக்கு எதிரான ஒரு யுத்தத் தயாரிப்பில் இறங்கியிருக்கிறார். இதே போன்று அவர் அடுத்த மாதம் சீனாவுக்கும் செல்லவிருக்கிறார்.

பாகிஸ்தான், சீனா போன்றவை இந்தப் பிரச்சினையில் தலையிட்டால், இந்தியாவின் செல்வாக்கு நிரம்பிய இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கும், ஸ்திரத்தன்மைக்கும் பங்கத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகும். அது இந்தியாவுக்கும் ஆபத்தாக அமையும்.''

**"இன்னொரு பக்கம், இந்தியாவை மட்டுமே அழைத்துப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்று இலங்கையில் ஜே.வி.பி அமைப்பு கூறி வருகிறதே?"**

அது வேறு கணக்கு! ஜே.வி.பி ஒரு தீவிரவாத கம்யூனிஸ்ட் அமைப்பு. சிங்கள பேரினவாதத்தை லட்சியமாகக் கொண்ட ஒரு தீவிரவாத இயக்கம். அவர்கள் எண்பத்து மூன்றுக்குப் பிறகு, ஈழப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவதைக் கண்டித்துப் பெரும் புரட்சிகளை நடத்தியவர்கள். இந்தியத் துருப்புகள் ஈழ மண்ணில் வந்து இறங்கியபோது அதை எதிர்த்து இலங்கையில் பெரும் கிளர்ச்சிகளை நடத்தியவர்கள். இவர்கள் தற்போது இலங்கைப் பிரச்சினையில் மீண்டும் இந்தியா தலையிட வேண்டும் என்று அழைக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இந்தியா மீதான நன்மதிப் பல்ல. இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு, இராணுவ ரீதியாக புலிகள் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்பதே அவர்களின உள்ளார்ந்த விருப்பம்.

**"கிழக்கு இலங்கையிலுள்ள ஜிகாத் குழுக்கள் பற்றித் தாங்கள் சமீபத்தில் கவலை தெரிவித்து, சில கருத்துக்களை வெளியிட்டிருந்தீர்களே..?"**

''ஆம். கிழக்கு மாகாணத்தில் தற்போது ஜிகாத் என்ற பெயரில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பாகிஸ்தான் நிதி உதவியும், ஆயுதப் பயிற்சியும் வழங்கியுள்ளது. இங்கிருந்து பல இளைஞர்கள் பாகிஸ்தான் சென்று இராணுவப் பயிற்சி பெற்றுத் திரும்பியிருக்கிறார்கள்.

வடகிழக்கு இலங்கையில் வசிக்கும் தமிழ் பேசும் முஸ்லிம்களும், தமிழர்களும் காலாகாலமாக சகோதரர்களாகப் பழகி வருகிறார்கள். இந்த நல்லுறவைக் கெடுத்து, எமக்குள் பிளவை ஏற்படுத்தும் நோக்கிலேயே இலங்கைப் புலனாய்வுத்துறை அதிகாரிகளும், பாகிஸ்தான் புலனாய்வுத்துறையினரும் இணைந்து சில இஸ்லாமிய அமைப்புகளைப் பயன்படுத்தி, இந்தப் புதிய சதி வேலையைச் செய்திருக்கிறார்கள். இது குறித்த அனைத்து விவரங்களையும் இலங்கை அரசாங்கத்துக்கும், நோர்வே அரசாங்கத்துக்கும், சர்வதேச உலகத்துக்கும் நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இலங்கை அரசு இப்போது அவசர அவசரமாக, இஸ்லாமிய படைப்பிரிவு ஒன்றைக் கிழக்கு இலங்கையில் அமைத்து, அதை வைத்து முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளது. இதுவும் மிக ஆபத்தான விஷயம். இஸ்லாமிய இளைஞர்களை அணிதிரட்டி, அவர்களின் கையில் ஆயுதங்களைக் கொடுத்து, அவர்களை விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராகத் திசை திருப்பும் நோக்கத்துடன்தான் சிங்கள அரசு இந்தக் காரியத்தைச் செய்கிறது.''

**"விடுதலைப் புலிகளின் மீதான பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டுக்குத் தாங்கள் பதில்தான் என்ன?"**

''எங்களது இயக்கம் நீண்ட வரலாறு கொண்ட ஒரு விடுதலை இயக்கம்.பதினெட்டாயிரம் போராளிகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து, ஆக்கிரமிப்பில் இருந்த எங்கள் தமிழ் மண்ணை மீட்டெடுத்து, இன்று அந்த நிலப்பரப்பில் ஒரு நிழல் அரசாங்கத்தை நடத்தி வருகிறோம். ஆனால், இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும். எமது போராட்டத்தின் வரலாறு, அதன் உள் நிகழ்வுகள், புலிகள் செய்த மகத்தான தியாகங்கள் ஆகியவற்றைத் தமிழக மக்கள் தெரிந்து கொள்ளும் நாள் வரும். அப்போது எம்மைப் பற்றிய உண்மைகளை அவர்கள் அறிந்து கொள்வார்கள். எமக்கும் தமிழக மக்களுக்குமான தொப்புள் கொடி உறவைஅறுக்க நினைப்பவர்கள், அப்போது காணாமல் போவார்கள்.''

**"கருணா ஏன் இந்த இயக்கத்திலிருந்து வெளியேறி, உங்களுக்கு எதிராக மாறினார்?"**

''கருணா எங்கள் அமைப்பில் ஒரு தளபதியாக இருந்தவர். ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவரைப் பற்றி பல புகார்கள் வந்தன. குறிப்பாக, இயக்க நிதியில் பெரும் மோசடி செய்து, தனிப்பட்ட வங்கிகளில் காசுகளைப் போட்டு, சில ஊழல்களிலும் ஈடுபட்டு வந்திருக்கிறார். இயக்கத் தலைமைக்குத் தெரியாமல், வயது குறைவான பள்ளிச் சிறுவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுத்து, அவர்களைத் தனக்குக் கீழாக ஒரு சிறுவர் படையணியாக உருவாக்கினார். இவை போக, பெண் போராளிகளைப் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தினார். இஸ்லாமிய மக்களுக்கு எதிராகச் சில படுகொலைகளையும் நிகழ்த்தினார் என்பது போன்ற பல உண்மைகள் வெளிவந்ததும், தலைவர் பிரபாகரன் இவரை விசாரணைக்காக வன்னிக்கு அழைத்தார். விசாரணைக்குப் போனால் தனது குற்றங்கள் அம்பலத்துக்கு வரும், இயக்க ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகநேரிடும் என்ற பயத்தில், கருணா திடீரென்று இயக்கத்திலிருந்து விலகி, எங்களுக்கு எதிராக அறிக்கைகள் வெளியிட்டார். ஆனால், நாங்கள் உடனடியாக எங்கள் படையணிகளை அனுப்பி, அவரது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீட்டெடுத்தோம். அதைத் தொடர்ந்து, அவர் கொழும்புக்கு ஓடிப்போய் இலங்கை இராணுவத்துடன் இணைந்து, தற்போது எமக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார். இவருக்குக் கீழ் ஒரு சிறு குழு செயற்படுகிறது. இவர்கள் இப்போது எமது ஆதரவாளர்களைக் கொல்வது, எம்மை ஆதரித்து எழுதும் பத்திரிகையாளர்களைக் கொல்வது, கல்விமான்களைக் கொல்வது எனப் பல படுகொலைகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவேதான், எங்கள் பேச்சுவார்த்தைகளின் போதுகூட, கருணா குழு என்ற துணைப்படைக் குழுவின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவர்களால் நிகழ்த்தப்படும் வன்செயல்கள் நிறுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தோம்.''

**"நீங்கள் வெளிநாடுகளில் 'இறுதி யுத்தம்' என்ற பெயரில், அங்குள்ள தமிழர்களை கட்டாய நிதி வசூலில் ஈடுபட்டு வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளதே..?"**



''இல்லவே இல்லை! ஆனால், ஈரத்துடன் இங்கே ஒன்றைப் பதிவு செய்ய விரும்புகிறேன்... உலக நாடுகளில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள்தான், ஈழத்திலுள்ள தமிழர்களின் ஜீவாதாரத்துக்குக் காலாகாலமாக உதவி வருகிறார்கள். பொருளாதார ரீதியாகத் தமிழீழம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலையின்மை, வறுமை, போர் அழிவு, இயற்கை இடர்பாடுகள்.. இப்படிப் பல துயரங்களை எமது சமூகம் அங்கு சந்தித்து வருகிறது. எமது மக்களுக்கு இலங்கை அரசாங்க உதவிகள் எதுவும் கிடைப்பதில்லை. எங்கள் மக்கள் தாமாக மனமுவந்து செய்யும் கொடையினால் தான் எமது இயக்கமும்,இயக்க வேலைகளும், சமூக அமைப்புகளும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தாய் மண்ணுக்காக எம் தமிழ்ப் பிள்ளைகள் தருகிற நிதி இது!''

இந்தச் சந்திப்பின்போது சிக்கலான சில கேள்விகளுக்குப் பதிலளிக்க நாசூக்காக மறுத்தார் அன்ரன் பாலசிங்கம்.

''தம்பி, அடுத்த முறை வரைக்குள்ள எங்களுடனேயே சாப்பிடவேணும்!'' - ஈழத் தமிழில் கைகூப்பி வழியனுப்புகிறார் அடேல் பாலசிங்கம்''.

நன்றி: ஆனந்த விகடன்



புலிகளின் கிழக்குத் தளபதிகளை அழைத்துவருவதற்கான படகு ஒழுங்கு தொடர்பாக முல்லைத்தீவு கடற்கரையில் காத்திருந்த புலிகள் மற்றும் கண்காணிப்புக்குழுவினர் -



கண்காணிப்புக்குழு தயார்படுத்திய கப்பலுக்கு படகுமூலம் செல்லும் புலிகள் - கண்காணிப்புக்குழுவினர்.



கண்காணிப்புக்குழுவினரால் ஒழுங்குசெய்யப்பட்ட கப்பலில் கடற்புலிகள் சிலர்.




வவுனியா - மூன்றுமுறிப்பில் கிளைமோர் தாக்குதலுக்குள்ளான பஸ்-



சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணை



குண்டுத்தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட இரண்டு சக்கர உழவு இயந்திரம் அருகில் படையினர்

# அதிநவீன காவல்துறையை கொண்ட மாநிலம் தமிழகம்!

## ஜெயலலிதா தெரிவிப்பு



திண்டுக்கல்

இந்தியாவிலேயே அதிநவீன காவல்துறையைக் கொண்ட மாநிலமாகவும், காவல்துறையில் பெண் கொமாண்டோக்களைக் கொண்ட முதல் மாநிலமாகவும் தமிழகம் விளங்குகிறது என முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜெயலலிதா பேசியதாவது -

5 ஆண்டுகளுக்கு முன் உங்களிடம் ஆதரவு கேட்டு வந்தேன். என்மீது வைத்த நம்பிக்கையின் காரணமாக என்னை முதல்வராக்கினீர்கள்.

உங்களுடைய அனைத்து எதிர்பார்புகளையும் தாண்டி செயற்பட்டுள்ளேன். மீண்டும் ஆட்சிக்கு வந்தால் 5 லட்சம் இளைஞர்களுக்கு தகவல் தொடர்பு துறையில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம். சாதி, மத கலவரமின்றி தமிழகம் அமைதிப்பூங்காவாக திகழ்கிறது.

மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையும், முட்டுக்கட்டை போடுவதையும் தாண்டி மக்களுக்கான நலத்திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம். உங்கள் வெற்றிதான் என்னுடைய வெற்றி. மீண்டும் தமிழகத்தில் நல்லாட்சி மலர ஜனநாயக மக்கள் கூட்டணி வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யுங்கள் என்றார் ஜெயலலிதா .

# வாக்குறுதி அளித்தால் அதிலிருந்து பின்வாங்கமாட்டேன்

## நடிகர் ரஜினி தெரிவிப்பு



சென்னை

நான் வாக்குறுதி அளித்தால் அதிலிருந்து பின்வாங்கமாட்டேன். நிச்சயம் நிறைவேற்றுவேன் என நடிகர் ரஜினிகாந்த் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

ரஜினிகாந்த் கடந்த சட்டசபைத் தேர்தல் மற்றும் 1998 லோக்சபா தேர்தலின் போது தி.மு.க கூட்டணிக்கு ஆதரவாக செயற்பட்டவர். அதன் பின்னர் நடந்த தேர்தல்களில் அமைதி காத்து வந்தார்.

எனினும், கடந்த 2004 லோக்சபா தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவித்தார். இந்த நிலையில் வரும் சட்டசபைத் தேர்தலில் ரஜினியின் ஆதரவு யாருக்கு என்ற கேள்விக்கு இன்னும் விடை கிடைக்காமல் உள்ளது.

சென்னை - அண்ணா நகரில் புதிய கார் காட்சியறை ஒன்றைத் திறந்து வைக்க ரஜினிகாந்த் நேற்று முன்தினம் வந்தார்.

இந்த நிகழ்ச்சியில் ரஜினி பேசியதாவது-

இது தேர்தல் நேரம். இந்த நேரத்தில் நான் எதுவும் பேசமாட்டேன். நான் ஏதாவது வாக்குறுதி கொடுத்தால் மீற மாட்டேன். வாக்குறுதியை நிறைவேற்றுவேன் என ரஜினி தெரிவித்தார்.

# தமிழக தேர்தலை முடிவு செய்வது கூட்டணி பலம் என்கிறார் சிதம்பரம்

சென்னை

கூட்டணி பலம் தான் தேர்தலை முடிவு செய்யும் என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

மைலாப்பூரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பேசியதாவது -

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும் போது அந்த ஆட்சி 5 ஆண்டுகள் எப்படி நடந்தது என்பதைப் பார்க்கவேண்டும். 5 நாட்களுக்கு முன்பு யார் ஆயிரம் ரூபா தந்தார்கள் என்பதைப் பார்க்கக்கூடாது. 2001 தேர்தலில் தி.மு.கவுக்கு துணைநின்றவன் நான் ஒருவன் மட்டும்தான். காங்கிரஸ், த.மா.கா, பா.ம.க, கம்யூனிஸ்டுகள் என்று அனைத்து கட்சிகளும் அ.தி.மு.கவை ஆதரிக்கும் ஒரு சூழ்நிலை அப்போது இருந்தது.

1980 க்குப் பிறகு நடந்த அனைத்து தேர்தல்களிலும் வெற்றிபெறுவது கூட்டணிதான். கூட்டணி பலம் யாருக்கு அதிகமாக இருக்கிறதோ அவர்கள்தான் வெற்றிபெறுகிறார்கள்.

கொஞ்சம் தற்பெருமை என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். காங்கிரஸ்கட்சி எந்த கூட்டணியில் இருக்கிறதோ அந்த கூட்டணிதான் வெற்றிபெற்று வருகிறது. இது சரித்திர உண்மை. 2001 இல் அமைந்த கூட்டணி 2004 இல் மாறிவிட்டது.

அன்று அ.தி.மு.கவை ஆதரித்த கட்சி கள் அனைத்தும் இன்று தி.மு.க தலைமையில் அமைந்துள்ள ஜனநாயக முற்போக்கு கூட்டணியை ஆதரிக்கின்றன. கூட்டணிதான் தமிழகத்தில் வெற்றி பெறுகிறது என்றால், கூட்டணிதான் தேர்தல் முடிவை தீர்மானிக்கிறது என்றால், இந்தத் தேர்தலில் கூட்டணி பலம்தான் தேர்தலை முடிவு செய்யும்.

இன்றைக்கு சில பத்திரிகைகள் ஜெயலலிதா திருந்திவிட்டார் என்று பழைய பல்லவி பாடுகிறார்கள்.

ஆனால், அவர் திருந்தவில்லை. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினரை பேசவிடுவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சர் பதவிக்கு சமமானவர். ஆனால், சட்டமன்றத்தில் அவரால் எழுந்து பேசமுடியுமா, குறுக்கிடமுடியுமா. சபாநாயகர் உட்பட யாருமே குறுக்கிட முடியாது. மீறி குறுக்கிட்டால் தூக்கி வெளியே வீசப்படுவார்கள்.

சட்டமன்றத்தில் அனைத்து மரபுகளும் மீறப்பட்டன. எதிர்க்கட்சிகளின் குரல்வளை நெரிக்கப்பட்டது. மக்கள் கருத்து அங்கே பிரதிபலிக்கவில்லை. ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டது. வாக்குப் போட்டதும் நமது கடமை முடிந்துவிட்டது என்று மக்கள் நினைக்கக்கூடாது. ஜனநாயகம் காக்கப்படவேண்டும்.

எங்களுடைய முதல் நிதிநிலை அறிக்கையில் சேது சமுத்திர திட்டத்தையும் அறிவித்தேன். சென்னையில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தையும் அறிவித்தேன். சேது சமுத்திரத்திட்டத்தை ஜெயலலிதா கடுமையாக எதிர்க்கிறார்.

சேது சமுத்திரத்திட்டத்தை கொண்டு வந்ததாகக் கூறும் அண்ணனும் அந்தத் திட்டத்தை எதிர்க்கும் தங்கையும் இன்றைக்கு உறவு கொண்டாடுகிறார்கள். நான் 3 நாட்களுக்கு முன்பு ஒரு கேள்வி கேட்டேன். சேது சமுத்திரத் திட்டத்தை ஆதரிக்கும் வைகோ தனது கொள்கையை மாற்றிக்கொணடாரா? இல்லை அந்தத் திட்டத்தை எதிர்க்கும் ஜெயலலிதா தனது கொள்கையை மாற்றிக்கொண்டாரா? இந்தக் கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

தி.மு.க தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள 2 ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசி, இலவசமாக தொலைக்காட்சி திட்டம் பற்றி ஆய்வு செய்துபார்த்துவிட்டேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றக்கூடியவைதான் என மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு

செல்லத்துரை பத்திநாதர்

தெல்லிப்பழை வடமேற்கு, இளவாலை சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், முன்னைய நீதிச்சபைத் தலைவரும் இளவாலை முதியோர்சங்கச் செயலாளரும்,

மெய்கண்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கணக்குப் பரிசோதகரும், வெண்புறா நூல்நிலைய ஆலோசகரும் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் இல.44இன் தலைவரும், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க நெறியாளர் சபையின் உப தலைவருமாகிய உயர்திரு.செல்லத்துரை பத்திநாதர் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையை பாராட்டி வாழ்த்திக் கௌரவிக்கின்றோம்.

இளவாலை

திரு.திருமதி.பொ.இராசேந்திரம் குடும்பம்.
திரு.திருமதி.வே.சண்முகநாதன் குடும்பம்.

[C/5259]

பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு

செல்லத்துரை பத்திநாதர்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உப தலைவரும், இளவாலை கிராம முன்னேற்றச் சங்கம், விவசாய சம்மேளனம், மத்தியஸ்தர் சபை ஆகியவற்றின் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமான

உயர்திரு.செல்லத்துரை பத்திநாதர் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்க பல்லாண்டு! வளர்க அவர் தம் சேவை!

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்.
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்.

[C/5256]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பருத்தித்துறை வர்த்தகர் நேற்று சுட்டுக்கொ[illegible]

பருத்தித்துறை—

பருத்தித்துறை முனைப்பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நேற்று இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத் தில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்த தோடு அவரது தந்தையாரும் படு காயமடைந்தார்.

நேற்று மாலை 4.30 மணியள வில் முனை கோரியடியிலுள்ள இராணுவத்தினரின் காவலரணுக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் அதேயிடத்தைச் சேர்ந்த தேவ ராசா மரியதாஸ் (வயது 25) என்ற வர்த்தகர் உயிரிழந்தார்.

கடையில் நின்றிருந்த இவரது தந்தை செபமாலை தேவராசா (வயது 58) என்பவர் படுகாயமடைந்து மந் திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின[illegible] மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வர்த்தக நிலையத்தில் பொருட் கள் விற்பனையில் ஈடுபட்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் விற்பனை நிலையத்தின் உரிமையாளர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். மகனைத் தடுக்க முற்பட்டவேளை தந்தை காயமடைந்ததாக தெரியவரு கிறது.

இந்த துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றவேளை கடைக்கு சமீப மாக இருந்த காவலரணில் நின்ற இராணுவத்தினர் பார்த்துக்கொண்டி ருந்ததாக அந்தப்பகுதி மக்கள் தெரி வித்தனர்.

## யுத்த சூழலை உருவாக்க...

எங்கள் தளபதிகள் முல்லைத்தீவுக் கரையில் பயணத்துக்கு ஆயத்தமா கும்போது – உங்களுடனான இணக் கப்பாட்டுக்கு விரோதமான சம்பவங் கள் பற்றி உங்கள் உடனடிக் கவ னத்துக்குக் கொண்டுவர விரும்புகி றோம்.

ஜெனிவாப் பேச்சுகளுக்குச் செல் வதற்கு முன்பு எமது தலைமைப் பீடத்தை மத்தியகுழு சந்திக்கவேண் டும் என்பதுபற்றியும், அதன் அவசி யம் பற்றியும் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக உங்களிடம் வலியுறுத்தி வந்துள்ளமையை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அதேபோன்று அனுசரணையா ளர்கள் என்றவகையில் நோர்வேத் தூதுவர், நோர்வேயின் விசேட தூது வரின் கவனத்துக்கும் கொண்டு சென்றமையை அவர்கள் இதற் கான ஏற்பாடுகளை உடன் ஒழுங்கு செய்ய முயற்சிப்பதாகக் கூறியமை யையும் நினைவுபடுத்தவிரும்புகிறோம்.

ஆனால், ஒரு மாதகாலமாக எந்தவித சாதகமான பதில்களையும் தெரிவிக்காது – காலத்தை இழுத் தடித்துவிட்டு பேச்சுவார்த்தைக்கான திகதிகள் நெருங்கிய நிலையில் எமது வழமையான அனைத்துப் போக்கு வரத்து ஏற்பாடுகளையும் நிராகரித்து, எமது தலைமைப்பீடத்துக்கு பாரிய இக்கட்டையும், நெருக்கடியையும் இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திய மையை நீங்கள் நன்கறிவீர்கள்.

இந்த இக்கட்டான நேரத்தில்தான் நீங்கள் ஓர் தற்காலிகமான உடனடி ஏற்பாடாக – முழுமையாக கண்கா ணிப்புக் குழுவின் ஏற்பாட்டுடன் கடற் படையின் எந்தத் தலையீடுமின்றி எமது தளபதிகளினதும், போராளி களினதும் பாதுகாப்பான போக்கு வரத்தை ஒழுங்கு செய்வதாகவும் அதற்கான நடைமுறைகளை கரையி லிருந்து கண்காணிப்புக்குழு ஒழுங்கு படுத்தும் கப்பல்வரை எமது கடற் கலங்களில் சென்று ஏறுவதற்கும், ஏறியபின் முழுமையாகவே கண் காணிப்புக் குழுவால் ஒழுங்குபடுத் தப்பட்ட கப்பலில் அவர்களின் பூரண பாதுகாப்பு வழித்துணையுடன் பய ணிப்பதாகவும், எந்தவிதமான கடற் படையினது பிரசன்னமோ, குறுக் கீடோ இருக்காது எனவும் அதேபோல் இறங்கும் இடத்திலும் இதே நடை முறையைப் பேணுவதாகவும் வாக் குறுதியளித்திருந்தீர்கள்.

உங்கள் உறுதிமொழியை நம் பியே எமது தளபதிகள் இன்று அதி காலையில் பயணிப்பதற்கான முழு ஏற்பாடுகளோடும் சமுகமளித்திருந்த வேளை – எமக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு முரணாக கரையிலிருந்து செல்வதற்கு சிவில் படகு ஒழுங்கு படுத்த வேண்டும் எனவும், கண்காணிப்புக்குழு ஒழுங்கு படுத்தும் கப்பலை விடுதலைப் புலி களின் படகு எனக்கருதி கடற்படை வழித்துணை வழங்கும் என்று புதிய- ஏற்றுக் கொள்ளமுடியாத நிபந்தனை களை விதித்தமை எமது தளபதி களின் பயண ஒழுங்கை இல்லாது செய்துள்ளது.

இதனால் கண்காணிப்புக்கு முவின் வாக்குறுதிகள் [illegible] நம் பிக்கையை இழக்கச் செய்ததுடன் – இலங்கை அரசினதும், படைத்தரப் பினதும் சமாதானத்துக்கு விரோத மான போக்கை மீண்டும் அனை வருக்கும் அம்பலப்படுத்தியுள்ளது.

கண்காணிப்புக்குழுவால் ஒழுங்கு படுத்தப்பட்ட கப்பலுக்கு அண்மை யில் கடற்படையின் 4 டோறாப் படகு கள் தரித்திருந்தன. அதிலிருந்த கடற் படையினர் 20 தடவைக்கு மேலாக கண்காணிப்புக்குழுவால் ஒழுங்கு படுத்தப்பட்ட கப்பலின் கப்டனைத் தொடர்புகொண்டு – தமது அனுமதி யின்றி கரைக்குச் செல்லவேண்டாம் என்று பணித்ததுடன், கப்பல் புறப் படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன் னர் தமக்குத் தெரியப்படுத்த வேண் டும் என்றும் கட்டளையிட்டனர். இறுதி யாக நேரம் போய்விட்டதால், கப்பலில் ஏறியுள்ளவர்களுடன் புறப்படுமாறும் கடற்படையினர் பணித்துள்ளனர்.

இந்தக் கப்பலைக் கடற்படையி னரே துறைமுக பொலிஸாருடன் ஒழுங்குபடுத்தியுள்ளதுடன் – இதற் கான எரிபொருளையும் கடற்படையி னரே நிரப்பியுள்ளனர். திருமலைத் துறைமுகத்திலிருந்து கடற்படையின ரின் டோறாவே இந்தக்கப்பலை வழிகாட்டி முல்லைத்தீவுக்கு அழைத்து வந்துள்ளது. இந்தக் கப்பலின் கப் டன் கடற்படையினரின் கட்டளைக ளுக்கு அமைவாவே செயற்பட்டார். இவை யாவும் நாம் கண்காணிப்புக் குழுவினருடன் ஏற்படுத்திய உடன் பாட்டுக்கு முற்றிலும் முரணானவை யாகும்.

இந்தச்செயற்பாடானது எமது தலைமைப்பீடத்தை ஆத்திரமடைய வும், ஏமாற்றமடையவும் செய்துள் ளது. அதேவேளை, அடுத்தகட்ட ஜெனிவாப் பேச்சுக்குச் செல்வதற்கு முன்பாக எமது தலைமைப்பீடம் கூடி முடிவெடுக்கும் சூழலையும் முற்றாக இல்லாமல் செய்துள்ளது.

ஒருபக்கம் சமாதானப் பேச்சுக்கு ஆயுத்தமாக இருப்பதுபோல அறிவிப் புக்களைச் செய்துகொண்டு – இரு தரப்பும் ஏற்றுக்கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகச் செயற்படுவதோடு விடுதலைப் புலிக ளைப் பேச்சுமேசைக்குச் செல்ல விடாது தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரச படைகள் தீவி ரப்படுத்தியிருப்பதையே இந்த நட வடிக்கை எமக்கு உணர்த்தியுள்ளது.

இதுவரைகாலமும் இருந்த நல் லெண்ண நடைமுறைகளையும் நிரா கரித்து, போர்நிறுத்த சூழலை இல்லா தொழித்து மிக மோசமான நிலை மையை உருவாக்குவதற்கு அரசு முயல்கிறதோ என்ற பலமான சந்தே கத்தையும் இந்த நடவடிக்கை எமக்கு உணர்த்தியுள்ளது.

இது ஜெனிவாப் பேச்சுக்களுக்குச் செல்வதற்கான எமது தீர்மானங்க ளையும், முயற்சிகளையும் கேள்விக் குறியாக்கியுள்ளதோடு – இத்தகைய துரதிஸ்டவசமான சூழ்நிலைக்கு முழுக்க முழுக்க அரசினதும் படை களினதும் – உடன்பாடுகளுக்கு விரோதமான போக்கே காரணமாக அமைந்துள்ளது என்பதையும் சுட் டிக்காட்டுகின்றோம் என குறிப் பிடப்பட்டுள்ளது.

## கவிஞர் நாவண்ணன் காலமானார்!

கொழும்பு—

பிரபல கவிஞரும் இலக்கிய கர்த் தாவுமான நாவண்ணன் கொழும்பு – அப்பலோ வைத்தியசாலையில் நேற் றுக் காலமானார்.

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட மரியநாயகம் ஆசைநாயகம் என்ற இயற்பெயரைக்கொண்ட இவர் தமிழில் பெருமளவான கவிதை களை எழுதியதுடன் குறுநாவல்கள், சிறுகதைகள், எழுச்சிப் பாடல்கள் என்பவற்றை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள்...

50 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 58 ரூபாவாகவும், 55 ரூபா 30 சதத் துக்கு விற்கப்பட்ட ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 63 ரூபாவாகவும், 30 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு லீற் றர் மண்ணெண்ணெயின் விலை 38 ரூபாவாகவும், அதிகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எரிபொருட்களின் கொள்வன வுக்கு அரசாங்கம் வழங்கிய மானி யம் நீக்கப்பட்டதை அடுத்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

## அதிகரித்து...

ஒழுங்குசெய்யப்பட்ட பயணம் நேற்று பிரச்சினையில் முடிந்துள் ளது. இது ஜெனிவா பேச்சுக்களுக்கு ஒரு சவாலாகும்.

சம்பந்தப்பட்ட தரப்புகளான இலங்கை அரசு – விடுதலைப்புலி கள் ஆகியோர் மட்டுமே பாதுகாப்பு நிலைமைகளை உறுதிப்படுத்த முடிவ துடன் ஜெனிவா பேச்சுக்களையும் பாதுகாக்க முடியும்

இறுதியாக நடந்த சம்பவம் தொடர் பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கைக்காக தாம் காத்திருப்பதாகவும், இது தொடர்பாக சர்வதேச ஆலோசனைகளை நாட விருப்பதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

## புலிகளின்...

கிழக்கு மாகாணத்துக்கான பதில் தளபதிகளை அழைத்துச்சென்று பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பு மாவட்ட தளபதி கேணல் பானுவை யும், திருமலை தளபதி கேணல் சொர்ணத்தையும் ஹென்றிக்சன் அழைத்துவருவதாக இருந்தது.

இதற்கமைய நேற்று அதிகாலை முல்லைத்தீவு கடற்கரையில் புலி களின் தளபதிகள் பணத்துக்காக காத் திருந்தார்கள்.

கண்காணிப்புக்குழு ஏற்பாட்டின் படி பயணிகள் கப்பல் ஒன்றும் முல் லைத்தீவு பகுதியை வந்தடைந்தது. அதனுடன் கூடவே கடற்படையின் தாக்குதல் டோறா படகுகளும் வந்தது டன், அவை கப்பலுக்கு மிக அருகே நடமாடின.

அத்துடன் கப்பல் கப்டனுக்கு உடன்பாட்டை மீறும்வகையில் சந் தேகத்துக்குரிய கட்டளைகளும் பிறப் பிக்கப்பட்டன. மேலும் இந்தக் கப் பலை ஒழுங்கு படுத்திய விடயத்திலும் கடற்படையே பங்குவகிக்கிறது.

இவற்றின் காரணமாக தளபதி களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி யுள்ளதாகவும் – இது தொடர்பாக எட் டப்பட்ட இணக்கப்பாட்டை அரசதரப்பு மீறியதாலும், கிழக்குத் தளபதிகளின் பயணம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

இதனால் மட்டக்களப்பில் கண்கா ணிப்புக்குழுத் தலைவர் ஹென்றிக் சனுடன் காத்திருந்த கேணல் பானு வும் தளம் திரும்பியதாக தெரியவரு கிறது.

கடற்படையினர் புலிகளின் தள பதிகள் பயணம் செய்யும் படகை தாக்க இரகசிய நடவடிக்கை எடுத்தி ருந்ததாக புலிகள் குற்றம்சாட்டியிருப் பது குறிப்பிடத்தக்கது.

கடற்பயணம் ரத்தானதால் ஜெனிவா பேச்சுக்கள் நடைபெறுமா என்ற சந்தேகத்தை கிளப்பியுள்ளது.

A/L 2006 கருத்தரங்கு
ஆரம்பம்: 17 ஏப்ரல் 2006
கணக்கீடு: திரு. பாலவாசன்

| | பகுதி I | பகுதி II |
| --- | --- | --- |
| கருத்தரங்கு | ஏப்ரல் 17, 18, 19, 20 | ஏப்ரல் 24, 25, 26, 27 |
| பரீட்சை | மே 02 | மே 03 |

பிரிவு : 1 7.30–12.30 பிரிவு 2 : 1.00–6.00
அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்முறை எமது நிறுவனத்தில் கல்வி கற்காத மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.
பின்வரும் இடங்களில் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.
விக்னா யாழ், D.C.M யாழ், நிரு கோண் ஈவில்
06 கருத்தரங்கு குறிப்புக்கள் வழங்கப்படும்.
ஏப்ரல் 16 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுகளினை மேற்கொள்ளவும்.
இறுதிச் சந்தர்ப்பம்...

# பேச்சுக்களில் புலிகள் பங்கேற்பது சந்தேகம் என்கிறது அரசாங்கம்!

ஜெனிவா—

ஜெனிவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கேற் பது சந்தேகமே என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அரச சமாதான செயலகப் பணிப்பா ளர் பாலித கொகன்ன இது தொடர் பாக மேலும் தெரிவிக்கையில் :-

புலிகளின் கடற்பயணத்துக்கான கடற்படையினரது பாதுகாப்பை புலிகள் எதிர்த்தனர். எம்மால் விதிக் கப்பட்ட நிபந்தனையல்ல அது. ஆனால், கண்காணிப்புக் குழுவின ருக்கும் புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வில் ஏற்றுக்கொள்ளப் பட்டது அது.

ஜெனிவா பேச்சுக்களுக்கு புலி கள் செல்வார்களா என்பது தொடர் பாக பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அரசாங்கம் பேச்சுக் களை முன்னெடுப்பதில் முனைப்பாக உள்ளது.

கடந்த வாரம் அரச படையின ருக்கு எதிராக ஆத்திரமூட்டும் நட வடிக்கைகளை விடுதலைப்புலிகள் மேற்கொண்டபோதும் நாம் ஜெனிவா பேச்சுக்களில் பங்கேற்க ஒப்புக் கொண்டுள்ளோம் என பாலித கொகன்ன தெரிவித்தார்.

## சாவகச்சேரி கிரனேட் வீச்சு; இராணுவச் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம்—

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக கடமையிலிருந்த படை யினர்மீது மேற்கொள்ளப்பட்ட கிர னேட் வீச்சில் சிப்பாய் ஒருவர் படுகாய மடைந்தார்.

நேற்றுப்பிற்பகல் 1.30 மணியள வில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சிப்பாய் பலாலி வைத் திய சாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் மேற் கொண்ட கிரனேட் வீச்சில் இந்தச் சிப்பாய் படுகாயமடைந்தார்.

இதன்பின்னர் படையினர் அந்த வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது மிகவும் மோசமா கத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

படையினர் நடத்திய தாக்குதலில் பலர் அடிகாயங்களுக்குள்ளாகியி ருந்தும் , எவரும் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டதாகத்தெரிய வில்லை. நேற்றுமுன்தினமும் இதே பகுதியில் கடமையிலிருந்த படையி னர் மீது கிரனேட் வீசப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 3 பருத்தித்துறை மீனவர்களை ஐந்து நாட்களாக காணவில்லை

பருத்தித்துறை—

பருத்தித்துறை முனைப் பகுதியி ருந்து தொழிலுக்குச் சென்ற மூன்று பேர் ஐந்து நாட்கள் கடந்தும் வீடு திரும்பவில்லையென அவர்களின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவல கத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முனை மதவடிப் பகுதியிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கடலுக்குச் சென்ற ஒரு பிள் ளையின் தந்தையான சந்தியாப் பிள்ளை அல்பிறட் சுதர்சன் (வயது- 25), தியாகராசா சுபாஸ்கரன் (வயது- 17), அன்ரனி மரியநாயகம் யேசு ராசா (வயது-19) ஆகியோர் நேற்று வரை கரைதிரும்பவில்லை.

இவர்களைத் கடந்த மூன்று நாட்களாக தேடிச்சென்றபோதும் கண்டுபிடிக்க முடியவில்லையென இவர்களின் உறவினர்கள் தெரிவித் தனர்.

இது தொடர்பாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிவற்றில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. (21)

## மன்னாரில்...

தாக்குதலில் இவர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

## திருமலையில்...

கப்பல் துறையிலுள்ள விமானப் படையினரின் முகாமுக்கு சென்று கொண்டிருந்த வேளையிலேயே மேற்படி வாகனம் தாக்குதலுக்கு உள் ளாகியது. காயமடைந்த விமானப் படை வீரர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இந்தத் தாக்குதலையடுத்து அரைமணிநேரம் துப்பாக்கி வேட்டுக் கள் தீர்க்கப்பட்டன.

## கடற்...

போன்று தமிழீழ விடுதலைப் புலி களின் கடற்பயணத்துக்கு அரசாங் கம் ஹெலிகொப்டர் வழங்கியிருந் தால் தற்போதைய நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம் .

ஜெனிவா பேச்சில் கலந்துகொள் ளும் நோக்கம் இரு தரப்பினருக்கும் இருப்பதுபோல் தென்படவில்லை.

பேச்சுவார்த்தையில் இரு தரப் பினரும் பற்றுறுதி கொள்ளாத பட்சத் தில் ஜெனிவா பேச்சுக்கள் பயன் தரப்போவதில்லை எனவும் கண்கா ணிப்புக்குழுத் தலைவர் தெரிவித் தார்.

## வவுனியா...

அனுராதபுரம் வைத்தியசாலைக் குக் கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித் தன.

இதேவேளை கிளைமோர் குண் டுத் தாக்குதல் நடைபெற்ற இடத் துக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் விசார ணையை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் வவு னியா நகரப் பகுதிக்கு பல வாகனங் களில் சென்ற இராணுவத்தினர் பொதுமக்களைக் கடுமையாகச் சோதனைக்கு உட்படுத்தியதுடன் இளைஞர்கள் தாக்கப்பட்டனர்.

இதனையடுத்து வர்த்தக நிலை யங்கள் மூடப்பட்டு மக்கள் நட மாட்டமின்றி வவுனியா நகரம் வெறிச் சோடிக் காணப்பட்டது. (03)

VACANCY
Post of Marketing Rep (Male)
விற்பனை தூதுவர் (ஆண்)

1.சாரதி அனுமதிப்பத்திரம் (Driving Licence)
2.மோட்டார் சைக்கிள் (Motre Cycle)

மேலே கேட்கப்பட்ட 1, 2 தகுதிகள் உள்ளவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர் கள் உரிய ஆவணங்களை கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 22.04. 2006 ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்

விளம்பர இல - 51
'நமது ஈழநாடு'
267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-521)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.